ஆகட்டும்

விலை ரூ.25



மலர் - 04 இதழ் - 11 செப்டம்பர் - 2026

பதிப்பாசிரியர் பக்கம்

அருட்பணி சாமி ம.ஊ.ச



அன்னை மரியாவின் பிறப்பு: மனிதகுல மீட்பின் விடியல்

இருள் சூழ்ந்த உலகிற்கு கதிரவன் உதிப்பதற்கு முன் தோன்றும் விடிவெள்ளியைப் போல, மனித குலத்தின் மீட்பரான நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை முன்னறிவிப்பாக அமைந்தது புனித கன்னி மரியாவின் பிறப்பு. விவிலிய வரலாற்றில் கடவுள் மனிதகுலத்தை பாவத்தின் பிடியிலிருந்து மீட்க இறைமீட்புத் திட்டத்தின் ஆரம்பமாக அமைந்தது அன்னை மரியாவின் மண்ணுலகப் பிறப்பு.

கதிரவன் உதிக்கும் போது உலகம் ஒளிர்கிறது ஆனால் விடியல் தோன்றும் போதே இருள் விலகத் தொடங்குகிறது. அதுபோலவே, நீதியின் கதிரவனான இயேசு கிறிஸ்து இவ்வுலகில் பிறப்பதற்கு முன்பே, விடியலின் விண்மீனாக அன்னை மரியா பிறந்தார். திருஅவைத் தந்தை புனித யோவான் தமஸ்க்கீன் குறிப்பிடுவது போல, "மரியாவின் பிறப்பு என்பது உலகிற்கு மீட்பின் வாசலைத் திறந்துவைத்த அருள் நிகழ்வு." நீண்ட காலம் குழந்தைப்பேறு இல்லாமல் இறைவனிடம் கண்ணீரோடு மன்றாடிய புனித சுவக்கீன் - புனித அன்னாள் தம்பதியரின் தவப் புதல்வியாக மரியா பிறந்தார். மனித பார்வையில் இயலாத ஒன்றை, இறைவன் தனது மீட்புத் திட்டத்தின் அடித்தளமாக மாற்றினார். ஆதிப் பாவத்தின் கறையின்றி, கடவுளின் திருவுளத்திற்கு முற்றிலும் கீழ்ப்படியும் ஒரு புனித ஆலயமாகும் அமலியாகவும் மரியா தாயின் கருவிலேயே உருவானார்.

உள்ளே

பதிப்பாசிரியர் பக்கம்	-	1-2
மரியாவின் ஆன்மிகம்	-	3-4
அன்னையின் திருத்தலம் நோக்கி	-	5-9
கவிதைப் பக்கம்	-	10
அன்னையின் திருத்தலம் நோக்கி	-	11-15
பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள்	-	16-17
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்	-	18-26
சம்மனசுக்களின் ராக்கினியே	-	27-28
விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி	-	29-31
விவிலிய வினாடி வினா	-	32

பழைய ஏற்பாட்டில் கடவுளின் பிரசன்னத்தைத் தாங்கிய உடன்படிக்கைப் பேழையைப் போல, புதிய ஏற்பாட்டில் உலக மீட்பரையேத் தன் கருவில் தாங்கிய உயிருள்ள பேழையாக அன்னை மரியா விளங்குகின்றாள். முதல் ஏவாளின் கீழ்ப்படியாமையால் மனிதகுலத்திற்குள் நுழைந்த பாவத்தின் தளைகள், மரியாவின் 'FIAT; இதோ ஆண்டவரின் அடிமை, என்றும் இறைவன் சித்தப்படியே ஆகட்டும்" என்ற தாழ்ச்சியான கீழ்ப்படிதலால் தகர்க்கப்படத் தொடங்கின.

திரு அவைத் தந்தையர்களின் மரபிலும் வழிபாட்டு முறையிலும், புனித கன்னி மரியாவின் பிறப்பு (செப்டம்பர் 8) மீட்பின் வரலாற்றில் ஒரு புதிய விடியலாக இருக்கின்றது. புதிய ஏற்பாட்டில் மரியாவின் பிறப்பைப் பற்றிய விரிவான வரலாற்றுத் தகவல்கள் நேரடியாக இல்லாவிட்டாலும், பழைய ஏற்பாட்டின் இறைவாக்கும் முன் அடையாளங்களும் மரியாவின் பிறப்பில் முழுமை பெறுகின்றன. "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையை நசுக்கும் நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்." (தொநூ. 3:15) திருஅவை தந்தையர்கள் மரியாவின் பிறப்பை, சாத்தானின் தலையை நசுக்கப்போகும் மெசியாவைத் தாங்கி வரவிருக்கும் அந்த வாக்களிக்கப்பட்ட "பெண்ணின்" வருகையாகக் காண்கின்றனர். "ஈசாயின் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்க்கும் அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனி தரும்." (எசா11:1) தாவீது அரசனின் தந்தை ஈசாயின் வழிமரபில் தோன்றிய அந்தப் புனித "தளிர்" தூய மரியாவாகவும், அவரிடம் மலர்ந்த "மலர்" இயேசு கிறிஸ்துவாகவும் விளக்கப்படுகின்றது. "கருவுற்ற பெண் பிள்ளை பெறும்வரை ஆண்டவர் அவர்களைக் கைவிடுவார் அதன்பின் அவனுடைய சகோதரரில் எஞ்சியிருப்போர் இஸ்ரயேல் மக்களிடம் திரும்பி வருவர்." (மீக்கா 5:2-3) இஸ்ரயேலின் மீட்பருக்காகக் காத்திருந்த நீண்ட காலம், அந்தத் தாய் மரியாவின் பிறப்பினால் முடிவுக்கு வந்து விடியல் தோன்றியது.

அன்னை மரியாவின் பிறப்பு நமக்கு உணர்த்தும் ஆழமான உண்மைகள்:

- *வாழ்வின் விரக்தியிலும் சோதனைகளிலும் இறைவனின் திட்டங்கள் ஒருபோதும் வீண்போகாது என்பதை அன்னாவின் மன்றாட்டு காட்டுகிறது.*
- *இறைவனின் குரலுக்கு முழுமையாக செவிமடுத்து, நம் வாழ்வை அவரது பணிக்காக அர்ப்பணிக்க மரியா நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறார்.*
- *பாவம் மற்றும் அச்சத்தின் பிடியிலிருந்து விடுபட்டு, கடவுளின் பேரன்பில் வாழும் புதிய தொடக்கத்தை அன்னையின் பிறப்பு நமக்கு நினைவூட்டுகிறது.*

அன்னை மரியாவின் பிறப்பு என்பது வெறும் ஒரு குழந்தையின் பிறப்பு அல்ல அது மனிதகுல வரலாற்றில் மீட்பின் வசந்தம் மலர்ந்த நாள். அன்னையின் தாழ்ச்சியையும் கீழ்ப்படிதலையும் நாமும் ஏற்று வாழ்வதே இப்பிறப்பு விழாவிற்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும்.



மரியாவின் ஆன்மீக சீடத்துவம

அருட்பணி. குழந்தைசாமி ம.ஊ.ச
மறைமாநில அதிபர்

செப்டம்பர் மாதம் எட்டாம் நாள் அன்னை மரியாவின் பிறப்பு பெருவிழா. அன்னையின் பிறப்பு நம் அனைவருக்கும் சிறப்பு ஏனென்றால் அன்னையின் வழியாக கடவுள் அருளிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு படைப்பு அனைத்தும் மீட்பு பெற் அனைவருக்கும் பரிந்து பேசும் தாயாக் உடன் பயணிக்கும் உன்னதமான வழிகாட்டியாக விளங்குவதை எண்ணி மகிழும் மகிழ்வான நாள். அன்னையின் பிறப்பு ஆண்டவரே நமக்கு அருளும் அழகிய அன்பளிப்பு. தம் திருமகன் இவ் அன்னையின் வழியாகவே இவ்வுலகுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் அன்னையின் வழியில் வளர்க்கப்பட வேண்டும் அன்னையின் அரவணைப்பில் அனைத்து உலகும் மகிழும் வகையில் தம் திருமகனோடு இணைந்து கடவுள் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளும் முழுமை பெற வேண்டும் என்பதே. ஆக அன்னை மரியாவின் இறை நம்பிக்கை அனைத்திற்கும் வழியாக அமைந்தது என்றால் மிகையாகாது. அன்னை மரியாவுக்கு நாம் எடுக்கும் அனைத்து பக்தி முயற்சிகளிலும் சிறந்தது ஒன்றாக கருதப்பட வேண்டும் என்றால், அது யாதெனில் அன்னை மரியாவின் வாழ்வில் அழகு பெற்ற மதிப்பீடுகளை நம்பிக்கையாளர்களாகிய நாம் ஒவ்வொருவரும் அதை உள்ளத்தில் ஏற்று தியானித்து கடைபிடித்து இவ்வுலகம் அறியச் செய்வதே அன்னைக்கும் ஆனந்தம் ஆண்டவருக்கும் ஆனந்தம் அகிலத்திற்கும் ஆனந்தம்.. ஆண்டவர் தாமே அனைத்தையும் உங்களுக்கு கற்றுத் தருவார் என்கிறது விவிலியம்...(யோவா.3,)

திரு அவையின் வரலாற்றின் பல்வேறு கலை வடிவங்களை உற்று நோக்குகின்ற போது அன்னை மரியாள் தனது தாய் புனித அன்னாள் வழியாக விவிலியைக் கல்வி கற்றுக் கொடுப்பதை நாம் காணலாம். ஆக அன்னை மரியாவின் கற்றலுக்கு இறை வார்த்தை மையம். கடவுளை விட இம்மண்ணுலகில் சிறந்த ஆசான் யாரும் இல்லை இருக்கவும் இயலாது. அனைத்தையும் படைத்தவர் அனைத்தையும் அறிந்தவர் அனைத்தையும் அறிவிப்பவர். ஆக அன்னை மரியாள் தனது தாயின் வழியாக விவிலியத்தின் மூலம் கற்று அறிந்து கொண்டார். கற்றதை முழு மனதோடு ஏற்று கடவுள் அருளால் வழிநடத்தப்பட்டு எத்தகைய

நோக்கத்திற்காக படைக்கப்பட்டு இம்மண்ணுலகில் பிறந்தார்களோ அதை அறிந்து, தேர்ந்து தெளிந்து, வாழ்வில் எல்லாச் சூழ்நிலையிலும் பிரமாணிக்கத்தோடு தம் திருமகனோடு இணைந்து செயல்பட்டார். இதுவே திரு அவை நமக்கு கற்பிக்கும் உன்னதமான படிப்பினை. ஆக அன்பார்ந்த சகோதர சகோதரிகளே அன்னையின் பக்தர்களே அன்னையின் பிறப்பு எவ்வாறு படைப்பினைத்திற்கும் சிறப்போ... அவ்வாறே கிறிஸ்துவ நம்பிக்கையாளர்கள் எல்லா நிலையிலும் சிறப்படைய அனுதினமும் செபிப்போம். நமது அன்றாட கிறித்துவ வாழ்வு அனைவருக்கும் சிறப்பாக அமைந்திட நம்முடைய சுய விருப்பு வெறுப்புகளை கடந்து சகோதர தோழமையில் ஒருவர் மற்றொவருடைய வாழ்வு சிறப்படையச் நம்மால் இயன்ற நற்செயல்களை செய்து அன்னை மரியாள் திரு அவைக்கு எல்லா நிலையிலும் அழகு சேர்த்ததுப் போன்று நாமும் திரு அவை நாளும் புது பொலிவு பெற அன்னையின் அன்பு பிள்ளைகளாக அவனியில் வளம் பெற்று, ஆண்டவருக்கு உரியவர்களாக அன்னையின் வழியில் நம் ஒவ்வொருவரின் பிறப்பும் சிறப்படைந்திட சிந்திப்போம் திறந்த மனதுடன் செயல்படும் இறை அருளின் ஆற்றலால் அனைத்து முயற்சிகளும் திருவினையாக அமையட்டும்...அன்னையின் பிறப்பு நமக்கு சிறப்பாக அமைந்தது போன்று நமது பிறப்பும் திரு அவைக்கும் மனித குலம் முழுவதற்கும் ஏன் படைப்பினைத்திற்கும் சிறப்பளிக்கும் ஆசிர்வாதமாக அமைய அனைவரும் இணைந்து, கடவுள் கற்ப்பித்தலை கவனமுடன் கற்ப்போம் ஆர்வத்துடன் கடைபிடிப்போம் கடைபிடித்ததை நமது வாழ்வு வழியாக பிறர் அறிந்து மகிழ செய்வோம்.

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சி பெயர்: குறிப்பிடப்படவில்லை

இடம்: செங்கல்பட்டு மாவட்டம்.

சாட்சி கருத்து:13 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்த குழந்தைப் பேறு ___ ஜெபத்தின் மூலம் கிடைத்த அற்புத சாட்சி.)

சாட்சி: முன்பு நான் இந்த பங்கில் தான் இருந்தேன் இப்பொழுது செங்கல்பட்டில் வசித்து வருகிறேன். 13 ஆண்டுகளாக குழந்தை இல்லாத நிலையில் ஆண்டவரின் கிருபையாலும் ஜீவ மாதாவின் அருளாலும் என் ஞானப்பிள்ளைக்கு கர்ப்பம் தரித்தது. கர்ப்பத்தின் போது மார்பகத்தில் கட்டி இருப்பது தெரியவந்தது அப்போது, ஆண்டவரின் கிருபையால் அந்தக் கட்டி அகற்றப்பட்டு தற்போது தாயும் குழந்தையும் நலமாக இருக்கின்றார்கள். வளைகாப்பு நடைபெறுவதற்கு முன் மாதாவுக்கு நன்றி செலுத்தவும் காணிக்கை கொடுக்கவும் இன்று வந்தோம் ஜீவ மாதாவுக்கும் இயேசுவுக்கும் நன்றி மரியே வாழ்க...வியக்கும் வண்ணம், வெறும் 2000 கட்டணத்தில் மாத்திரைகளிலேயே குணமாகி வீடு திரும்பினார் ஜீவ மாதாவுக்கு என் நன்றி

அன்னை மரியாவின் திருப்பயணங்கள்

அருள்சகோதரி **டெக்லாமோரி** ம.ஊ.ச
செர்வைட் தலைமையகம், சென்னை.

பயணம் பதிமூன்று

தொடக்கவுரை

பயணம் செய்யும் திருஅவையாம் கிறிஸ்துவின் மறை உடலில் நாம் உறுப்பினர்களாக இருக்கிறோம். நமது பயணம் எதிர்நோக்கின் திருப்பயணமாக அமைகின்றது. ஒரு நாள் நம் பயணத்தின் இறுதி இலக்கான நிலைவாழ்வை அடைவோம். நம்மைப் படைத்த இறைவனை முகமுகமாய்த் தரிசிப்போம் எனும் எதிர்நோக்கில் நம்பிக்கையுடன் பயணிக்கின்றோம். அந்த எதிர்நோக்கு நமது துன்ப துயரங்களை, சோதனைகளை, சவால்களை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ள துணிவைத் தருகிறது. அன்னை மரியாவின் திருப்பயணமும் இதையே நமக்கு தெளிவுபடுத்துகிறது. பாடுகளை, மரணத்தை அனுபவித்த இயேசு, தான் முன்னுரைத்தது போலவே மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார் என்று நம்பினார். இறைவார்த்தை உயிருள்ளது ஆற்றல் மிக்கது அது பொய்க்காது நினைத்ததை நிறைவேற்றும் என்பதை மரியா உள்ளூர உணர்ந்திருந்தார். எனவேதான் "உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று உறுதியுடன் வானதூதரிடம் எடுத்துரைத்தார். இயேசுவின் பாடுகளை ஆழ்ந்து தியானித்த பின் அவரின் உயிர்ப்பு நிகழ்வைக் காண மரியா தன்னைத் தயார் செய்தார். அனைத்திற்கும் மேலாக இறைவனை அவர்தன் அன்பு மகனை மிக நெருக்கமாக அன்பு செய்த மரியாவுக்கு இயேசுவின் உயிர்ப்பு அனுபவம் முதலில் அருளப்பட்டிருக்கும் என்று திருஅவையில் ஒரு மரபு நிலவி வருகிறது. புனித லொயோலா இஞ்ஞாசியார் தமது ஆன்மிகப் பயிற்சிகளில் இதை வலியுறுத்துகிறார். ஒரு மாத தியானத்தின் இறுதி வாரத்தில் மரியாவின் இந்த அனுபவத்தை ஆழ்ந்து தியானிக்க அழைக்கிறார். தனது செப அறையில் இறைவேண்டுதலில் மூழ்கி இருக்கும்போது உயிர்த்த இயேசு அவர்முன் தோன்ற, அவர் செபத்திலிருந்து எழும் காட்சி இங்கிலாந்தில் உள்ள பெயர் போர்டு என்ற இடத்தில் அமைந்துள்ள கோவிலின் வண்ணக் கண்ணாடியாலான சாளரத்தில் அமைந்துள்ளது. இயேசுவின் உயிர்ப்பு அனுபவம் மரியாவை செயல்பாடுகளுக்கு அழைத்துச் சென்றது. தொடக்கத் திருஅவையின் தோற்றம், வளர்ச்சியில் அவரின் ஈடுபாடு அதிகமானது. மரியாவின் பதிமூன்றாவது திருப்பயணத்தை விவரிக்கும் இக்கட்டுரையில் இயேசுவின் சீடர்களோடு பெத்தானியாவின் அருகில் உள்ள ஒலிவ மலைக்குப் பயணித்ததைத் தியானிப்போம். இப்பயணத்தின் வழியாக அவர் தரும் செய்தியை வாழ்வாக்குவோம்.

உயிர்த்த இயேசுவின் பயணங்களில் மரியா

இயேசு துன்புற்று இறந்த பின்பு 40 நாட்களாக தம் திருத்தூதர்களுக்குத் தோன்றி இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தார். பல தெளிவான சான்றுகளால் தான் உயிரோடு இருப்பதைக் காண்பித்தார் என்று திருத்தூதர் பணிகள் நூலில் நாம் வாசிக்கின்றோம். மகதலா மரியாவுக்குத் தோன்றினார். மற்ற பெண்களும் அவரைக் கண்டு பணிந்தனர். பேதுருவுக்குத் தோன்றினார். எம்மாவு சென்ற இரு சீடர்களோடு வழிப்போக்கனாய்ப் பயணித்து அப்பம் பிடுகையில் தன்னை வெளிப்படுத்தினார். தோமாவுக்குக் காட்சி அருளி தம் காயங்களையும் விலாவையும் தொடுவதற்கு அனுமதித்தார். திபேரியக் கடல் அருகே சீடர் எழுவருக்குத் தோன்றினார். அவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்திருந்தார். இவ்வாறு உயிர்த்த இயேசு அடிக்கடி தன் சீடர்களுக்குத் தோன்றி அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். தனக்குப் பின் இறையாட்சிப் பணிகளை அவர்கள் ஆற்ற தயார் செய்து கொண்டு வந்தார். மரியா இந்நிகழ்வுகளில் பங்கு பெற்றது புதிய ஏற்பாட்டில் இடம்பெறாமல் இருக்கலாம். ஆனால் இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின் ஒலிவ மலையிலிருந்து திரும்பி வந்த சீடர்கள் அனைவரும் சில பெண்களோடும் இயேசுவின் சகோதரர்களோடும் அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள் என்று திருத்தூதர் பணிகள் நூலில் இடம்பெறுவது நம்மை சற்று வித்தியாசமாகவும் சிந்திக்க அழைக்கின்றது.

இயேசுவின் உயிர்ப்பின் ஆற்றலைப் பெற்ற மரியா, யோவானைப் பின் தொடர்ந்து திருத்தூதர்கள் குழுமத்தில் தம்மை இணைக்கின்றார். உயிர்த்த இயேசு தம்மைக் கண்ட யாவரிடமும் நற்செய்தியைப் பரப்பி இறையாட்சிக்குச் சான்று பகரவே பணித்தார். தன் தாயிடமும் அதே பணியை ஒப்படைத்திருப்பார். உயிர்ப்புக் காட்சிகளை நிச்சயம் யோவான் மரியாவிடம் பகிர்ந்து கொண்டிருப்பார். மகதலா மரியாவும் மற்ற பெண்களும் தம் அனுபவங்களை மரியாவிடம் பகிர்ந்து கொண்டிருப்பர். எனவே திருத்தூதர் அனைவரையும் ஒன்றிணைக்க நம்பிக்கையால் அவர்களை உறுதிப்படுத்த தன்னை மீண்டும் அர்ப்பணித்தார் மரியா. இயேசுவின் தாயாக மட்டுமல்லாது, உயிர்த்த கிறிஸ்துவின் ஒப்பற்ற சீடத்தியாக தூதுரைக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இயேசுவின் உயிர்ப்புப் பயணங்களில் பங்கேற்றிருப்பார் என்று கூட நாம் யூகிக்கலாம். இதற்கான காரணங்கள் அவர் தூய ஆவியாரின் வருகைக்காக தொடர்ந்து பத்து நாட்கள் இறைவேண்டலில் ஈடுபட்டது. தொடக்கக் கால திருஅவை இயேசு கண்ட இறையாட்சியாக மலர்வதற்கு மரியா சான்று பகர்ந்தார்.

ஒலிவ மலையை நோக்கிய பயணம்

யோவான் நற்செய்தியின் கடைசி அத்தியாயங்களில் இயேசு பல முறை தன் தந்தையிடம் செல்வதாகவும், சென்றால் தான் தூய ஆவியாரை அனுப்ப முடியும் என்று கூறுவதைக் காண்கிறோம். நான் தந்தையிடமிருந்து இந்த உலகிற்கு வந்தேன். இப்போது உலகை விட்டு தந்தையிடம் செல்கிறேன். இனி நான் உலகில் இருக்கப் போவதில்லை. நான் உம்மிடம் வருகிறேன்



என்று கூறுகிறார். மண்ணகத்தை விண்ணகமாக மாற்ற, மனிதர்களை தெய்வங்களாக உருமாற்ற இயேசு மனிதனாகப் பிறந்தார். தம் பணிகளை விரைவாக ஆற்றிய பின் அவர் எங்கிருந்து புறப்பட்டாரோ அதே இடத்திற்குச் செல்ல ஆயத்தமானார். அதற்கு முன்பாக திருத்தூதர்களை தனக்குப்பின் ஆற்ற வேண்டிய பணிகளை விவரமாக, அழுத்தமாக நினைவூட்டிக் கொண்டேயிருந்தார்.

லூக்கா தமது நற்செய்தியில் இயேசு பெத்தானியா வரை தம் சீடர்களை அழைத்துச் சென்றார் என்று குறிப்பிடுகிறார். திருத்தூதர் பணிகள் நூலில் விண்ணேற்பு நிகழ்வுக்குப் பின் ஒலிவ மலையில் இருந்து எருசலேமுக்குச் சென்றனர் என்று குறிப்பிடுகின்றார். உயிர்த்த இயேசுவின் இறுதிப் பயணம் எருசலேமில் அவர்கள் தங்கியிருந்த மேல் மாடியில் இருந்து பெத்தானியாவை நோக்கி புறப்படுகிறது. மரியா அமைதியாக நடந்து செல்கிறார். பாடுகள் முதல் உயிர்ப்பு வரையிலான நிகழ்வுகளை அவர் தன் இதயத்தில் சுமந்து செல்கின்றார். பெத்தானியாவை நெருங்கும்போது அவர் இதயம் மகிழ்வால் நிறைகின்றது. தம் அன்பு மகனின் நண்பர்களான மார்த்தா, மரியா இலாசரை நினைவு கூறுகின்றார். இயேசு ஆறுதலை தேடிச் சென்ற இடம், நல்ல விருந்து உண்ட இடம், நான்கு பேரும் கண்ணீர் சிந்திய இடமும் கூட. இலாசரின் இறப்பு, அவரை உயிர்ப்பிக்கச் செய்தது இயேசுவை எவ்வளவு தூரம் பாதித்திருந்தது என்பதை உணர்ந்திருந்தார். அவரை உயிர்ப்பிக்கச் செய்தது. தலைமைக் குருக்களுக்கு இயேசுவின் மீது கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தி மாசற்ற செம்மறியை கொலைக்களத்திற்கு இட்டுச் சென்றது. இத்தகைய சிந்தனைகளால் தன்னை நிரப்பியவராக மரியாவின் பயணம் மெல்ல ஒலிவ மலையை நோக்கிச் செல்கிறது.

மீண்டும் அன்னை ஆழ்ந்த தியான உணர்வுகளுக்குள் மூழ்குகிறார். ஒலிவ மலையில் தம் அன்பு மகன் அடிக்கடி வழக்கமாக செபிக்கச் செல்வதையும் தாம் பாடுகள் அனுபவிப்பதற்கு முன் இதன் மேற்கு பகுதியில் சரிவான இடத்தில் அமைந்துள்ள கெத்சமனி என்ற தோட்டத்தில் வேதனை மிகுதியால் உருக்கமாக விண்ணகத் தந்தையிடம் வேண்டிக் கொண்டிருந்ததையும், அவரது வியர்வை பெரும் இரத்தத் துளிகளைப் போல தரையில் விழுந்ததையும் நினைவு கூர்கின்றார். இயேசுவின் வாழ்வோடும் பாடுகளோடும் தொடர்புடைய இந்த இடங்களின் அருகிலிருந்தே அவர் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது இறைவனின் திருவுளம் என்று எண்ணி வியக்கின்றார். இந்த அனுபவங்களை மீண்டும் மீண்டும் தியானித்து அவைகளைப் பொக்கிஷமாக இதயத்தின் ஆழத்தில் பொதிந்து வைத்தார்.

இயேசுவின் விண்ணேற்றப் பயணம்

தந்தையாம் இறைவனின் குறித்த காலம் வந்தது. இறைமகனை மாட்சியுடன் விண்ணகத்திற்கு எடுத்துக் கொண்டார். தம் கைகளை உயர்த்தி தம் சீடர்களுக்கு ஆசி வழங்குகிறார். சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த அன்பு அன்னையிடம் மகன் இயேசு ஆசி பெறுகின்றார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நற்செய்தி பணியாற்ற "சென்று வா மகனே" என்று அன்பொழுக அனுப்பி வைத்த அந்த நாசரேத்தூர் நாயகன் இயேசுவே என்று உலகின்

மீட்பராக தம் பணியை நிறைவேற்றி விண்ணுலக மாட்சியினுள் நுழையும் காட்சியைக் கண்டு அகமகிழ்ந்தார். அவர் மீது தன்னுடைய கண்களை பதிய வைக்கின்றார். உடல்கள் பிரிந்து நின்றாலும் இரு இதயங்களும் மிக நெருக்கமாக இணைந்திருந்தன. தாம் விண்ணகம் செல்வது போலவே தன் அன்பு அன்னையும் ஆன்ம உடலுடன் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார் என்றும், அவர் விண்ணக மண்ணக அரசியாக மூவொரு இறைவனால் முடிசூட்டப்படுவார் என்று இயேசு தன் அன்னைக்கு உணர்த்துகின்றார். இயேசு மட்டும் அல்ல, கடவுளின் அன்புப் பிள்ளைகள் அனைவரும் விண்ணக மாட்சியில் நுழைய வேண்டும் என்று செபித்தவாறு அங்கு நிற்கின்றார்.

நற்செய்தியாளர் லூக்கா மிக அழகாக இப்பகுதியை விவரிக்கின்றார். இயேசு தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்தபோதே மேகம் ஒன்று அவரை எடுத்துச் சென்றது, அவர்கள் பார்வையில் இருந்து அவர் மறைந்து விட்டார். அவர் செல்லும் போது அவர்கள் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக் கொண்டே இருந்தார். அப்போது வெண்ணாடை அணிந்த இருவர் தோன்றி "கலிலேயரே நீங்கள் ஏன் இவ்வாறு வானத்தை நோக்கிய வண்ணம் இருக்கின்றீர்கள். விண்ணகம் சென்ற இயேசு மீண்டும் வருவார் என்று கூற இயேசுவின் சீடர்கள் அனைவரும் அவரை வணங்கி விட்டு மரியாவின் தலைமையில் பெருமகிழ்ச்சியோடு எருசலேம் திரும்பிச் சென்றனர். அவர்கள் கோவிலில் எப்போதும் கடவுளைப் போற்றி வந்தார்கள்.

மரியா தரும் செய்தி

நாம் அனைவரும் விண்ணுலகிற்காக படைக்கப்பட்டிருக்கிறோம். இந்த மண்ணுலகில் அருள்நிறை வாழ்வில் நிலைத்திருக்க அழைக்கப்படுகிறோம். விண்ணக வாழ்வை இம்மண்ணுலக வாழ்விலே முழுமையாக வாழ்வதுதான் நிறை வாழ்வு. இது நாம் அடையவிருக்கும் நிலைவாழ்விற்கு மிகத் தேவை இம்மைக் காலத்தில் நாம் படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்படப் போகிற மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை என்று புனித பவுலடியார் கூறுகின்றார். அன்னை மரியா துன்பங்களை மகிழ்வுடன் ஏற்றார். அவரைப் போன்று யாரும் துன்பங்களை அனுபவித்ததில்லை. அனுபவிக்கப் போவதுமில்லை. துன்பங்கள் வழியாக மீட்பர் இயேசுவின் பாடுகளில் பங்கேற்றார். உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்றார். உயிர்ப்பின் ஆற்றலால் சீடர்களை ஒன்றிணைக்க வேண்டும். அவர்கள் உலகெங்கும் சென்று திருத்தூதுரைக்கும் பணிகளை ஆற்ற வேண்டும். நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும். நோய்களை குணப்படுத்த வேண்டும். பேய்களை ஓட்ட வேண்டும் என்ற இயேசுவின் நற்செய்தியை உள்வாங்கினார். சிதறிக் கிடந்த சீடர்களை ஒரு தாய் போல ஒன்று சேர்த்தார். அன்னையின் மாதிரியைப் பின்பற்றி நாமும், இறைவார்த்தையில் வேரூன்றிய வாழ்வில் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டும். ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் நிகழ்வுகளில் இறைக்குரலை கேட்க வேண்டும். ஏழை எளியவர்களோடு நமக்குரியவற்றைப் பகிர்ந்து அனைவரும் மகிழ்வுடன் வாழ, அதுவே நம்முடைய இறுதித் தீர்ப்பாக அமைய உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ மரியா நம்மை அழைக்கின்றார்.

நிறைவுரை

திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் தூதுரைக்கும் பணிகளில் ஈடுபட வேண்டும். நற்செய்தியை நம்முடைய வார்த்தையாலும் வாழ்வாலும் பறைசாற்ற வேண்டும். நாம் இப்பணிகளை நேரடியாக ஆற்ற முடியாமல் இருக்கலாம். ஆனால் நாம் ஆற்றும் பலவகைப் பணிகள் வழியாக இயேசுவின் வாழ்வுக்கு, அவருடைய மதிப்பீடுகளுக்குச் சான்று பகர வேண்டும். காயப்பட்ட இந்த உலகை நாம் குணமாக்குவோம். ஆதிக்கம், அடக்குமுறை போன்ற தீய சக்திகளை முறியடிப்போம். நம்முடைய மறைக்கல்வி வழியாக கிறிஸ்தவ நம்பிக்கையை நமது மாணவர்களில் வளர்த்தெடுப்போம். மரியாவின் திருப்பயணங்கள் நம்மை இறைவனோடும் பிறரோடும் அழைத்துச் செல்லட்டும். நமது பயணங்களில் மரியாவின் உடனிருப்பையும் அரவணைப்பையும் உணர்வோம்.

பயணம் தொடர்கிறது . . .

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சியின் கருத்து:"சோதனைகளின் நடுவிலும் கைவிடாத ஆண்டவர் - கணவருக்கு சுகமும் மகனுக்கு மீண்டும் வேலையும் தந்த அற்புத சாட்சி".

சந்தனம் மேரி - கண்ணகி நகர்

என்னுடைய கணவர் 3 ஆண்டுகளாக உடல்நலக் குறைவால் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில், அறுவை சிகிச்சை செய்தால் பேச்சு வராமல் போகலாம் அல்லது கை, கால் செயலிழக்கலாம் என்று மருத்துவர்கள் சொன்னார்கள் அதனால் அறுவை சிகிச்சை வேண்டாம், மாத்திரை மட்டும் கொடுக்குமாறு மருத்துவரிடம் கூறினேன், கடவுள் சுகம் தருவார் என்ற நம்பிக்கையில் இருந்தேன். இப்போது என் கணவருக்கு ஓரளவு சுகமாய் இருக்கிறார்.

அதேபோல், என்னுடைய மகன் வேலை செய்த நிறுவனத்தில் இருந்து வேலை விட்டு நிறுத்தப் போவதாக தகவல் வந்தது, எனக்கு மறுபடியும் மிக வருத்தமாக இருந்தது. ஆனால் ஆகஸ்ட் 15-க்கு முன்பாக அதே நிறுவன மேலாளர் மீண்டும் அழைத்து, அதே அலுவலகத்தில் வேலைக்கு வரச் சொன்னார்கள் என் மகனும் மீண்டும் வேலைக்கு சென்றான். இது மட்டும் இல்லாதது என் மகள் இறந்த துயரத்தையும் நாங்க தாங்கிக்கிட்டோம் அந்த நேரத்துல எங்கள் குடும்பம் மிக துயரத்தில் இருந்தோம்.

அப்பொழுது கூட

"கடவுள் நம்மை கைவிடமாட்டார் கெட்டதை நினைக்காம நல்லதே இணைப்போம்" என்ற நம்பிக்கையுடன் இருந்தோம். இயேசப்பாவும் மாதாவும் தான் எங்கள் குடும்பத்தை கைவிடாமல் இருந்ததற்கு நன்றி இயேசுவுக்கே புகழ் மரியே வாழ்க..

குணமாகி வீடு திரும்பினார் ஜீவ மாதாவுக்கு என் நன்றி

கவிதைப் பக்கம்



மீட்புப் பயணம் - 8

முனைவர். ஜோ. விண்ணரசன்.

கதைமாந்தர் -யூதா

இஸ்ரயேல் என்னும் இதிகாசம் பெற்ற
யாக்கோப்பின் புதல்வர் பன்னிருப் பரல்கள்
ரூபன் என்பவர் தலைச்சன் மலராம்
சிமியோன், லேவி அதன்பின் தளிராம்

மாட்சியாய் பிறந்தவர் யூதா என்பதால்
ஆட்சிக்கு உகந்தவர் இவர்பெற்ற வரமாம்
நான்காம் பிள்ளையாய் திகழ்ந்தபோதிலும்
தாம்தாம் தலைமைக்கு தகுந்த தரமாம்

தலைச்சன் பிள்ளைக்கு கிட்டாத உரிமை
தகைசால் இவருக்கு எட்டிய பெருமை
தாவீது சாலமோன் மாமகா மன்னர்கள்
யூதாவின் மரபினர் என்பதோ செழுமை.

வலிமை நிறைந்த சிங்கம் எனவும்
தனிமை வாய்ந்த தங்கம் எனவும்
தந்தையின் வாய்ச்சொல் மந்திரம் பெற்றவர்
சிந்தையின் வாய்க்கால் தந்திடப் பெற்றவர்

உலகத்தை மீட்கும் உன்னதர் இயேசு
உதிக்கும் பாக்கியம் இன்னவர் மரபே
உதிரத்தில் தாங்கிய மரியாவின் பிறப்பும்
உத்தமக் கணவர் யோசேப்பும் இத்தளிரே.

குறிப்புகள் மிகவாய் இல்லை எனினும்
குலத்தின் தந்தை இவர்தான் இன்றும்
சுகத்தினில் காணா வியப்புகள் யாவும்
நிசத்தினில் காணும் சிறப்புதான் தனிமை.

விவிலியம் சொல்லும் குலத்தினர் என்று
விளித்திடும் செருக்கினை இன்றுமே கண்டு
கனிதரும் சொற்கள் நடைமுறை நீண்டு
சரித்திரம் போற்றும் தலைமுறைச் சான்று.

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்
சங்கமம் ஏற்படும் அங்கமாய் நின்று
சொந்தம் கொண்டாடும் அழியாதக் கதிர்
பந்தம் நின்றாடும் புரியாத புதிர்.

அன்னையின்

92 திருத்தலம் நோக்கி

தூய மரியன்னை பேராலயம், ஆசென் - ஜெர்மனி
அருட்பணி. **சகாயராசு** ம.ஊ.ச, இத்தாலி





கடவுள், "விண்ணுலக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் உலர்ந்த தரைக்கு "நிலம்" என்றும் ஒன்றுதிரண்ட நீருக்குக் "கடல்" என்றும் பெயரிட்டார். (தொநூ 1, 9-10). கடவுள் அற்புதமான கைவினைஞன். அவர் உருவாக்கிய அற்புதத்தை விவிலிய ஆசிரியர் எந்தவித ஆரவாரம் இன்றி அமைதியாய் எடுத்துரைக்கும் அற்புதமான சொற்களே மேற்கூறியுள்ள தொடக்க நூல் சொற்தொடர்கள். பூமித்தாயின் எல்லைகளை, அதிலும் குறிப்பாக பூமியும், கடலும் சங்கமிக்கும் எல்லைகளை இறைவன் எங்ஙனம் படைத்திருக்கிறார் என்பதை கண்டு வியப்பதற்குள் நம் வாழ்நாளே முடிந்துவிடும். பரந்து விரிந்த மணற்பரப்பு, செங்குத்தானப் பாறைகளும் முகடுகளும் நிறைந்த மலைப்பகுதிகள், வானுயர்ந்து நிற்கும் மரங்கள் அடர்ந்த கானகம் என எந்த ஒரு கைத்தேர்ந்த ஓவியனும் பிரதியெடுக்க இயலா வண்ணம் இறைவனின் கைதேர்ந்த ஓவியமாய் விளங்கும் எண்ணற்ற கடற்கரைகள் உலகில் பரவிக் கிடக்கின்றன. அத்தகைய கடற்கரையில் ஒன்றுதான் மத்தியதரைக் கடலின் ஒரு பகுதியாகிய திர்ரேனியக் கடலை ஒட்டிய கடற்கரையாகும். இக்கடல் இத்தாலியின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. இத்தாலியின் வரைப்படத்தை எளிதாய் நினைவுகூர, புவியியல் ஆசிரியர் சொல்லித் தந்த குறிப்பு கால்பந்து வீரரின் கால் போன்றமைந்து அதன் கீழ் பந்தாய் காணும் சிசிலிய தீவு என்பதாய் என் நினைவுகள். இந்த திரேனியக் கடலில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவே த்ரோபேயாத் (Tropea) தீவாகும்.



அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட வானுயர்ந்த நிற்கும் பேராலயங்கள்,

கல்லில் கவிபாடும் வேலைப்பாடுகள் நிறைந்த நூற்றாண்டுகள் பழமையான ஆலயங்கள், தங்கள் வாழ்வில் அன்னை வழியாய் இறைவன் செய்த அற்புதமான காரியங்கள், வெற்றிகளுக்கு நன்றியாக பேரரசர்கள் எழுப்பிய ஆலயங்கள் என்று பல ஆலயங்கள் பற்றி நாம் அறிந்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், ஏதோ ஒரு தீவில் உள்ள இந்த எளிய, சிறிய அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயத்தை பற்றி நாம் ஏன் அறிந்து கொள்ள வேண்டும் என்கிற வியப்பு நம்மில் எழாமல் இருக்க வாய்ப்பில்லை. இக்கேள்வி விடையறிய நாம் திருஅவையில் இருந்த, இருக்கின்ற பல்வேறு விதமான மரபுகள் (traditions) மற்றும் ரீதிகள் (rites) பற்றி அறிந்து கொள்வது நலம் பயக்கும். உரோமை கத்தோலிக்கத் திருஅவையானது 24 தனித்துவமும், சுயாதீன தன்னாட்சி கொண்ட திருஅவைகளை கொண்டது. இவற்றில் மேற்கத்திய திருஅவையானது இலத்தீன் ரீதியையும் (Latin Rites), ஏனைய 23 திருஅவைகள் கீழை ரீதியையும் (Eastern Rites) கடைபிடித்து தங்களுக்கென்ற தனித்துவமான வழிபாட்டு முறைகளை கடைபிடிக்கின்றன. இவற்றை எல்லாம் ஒன்றிணைப்பது கத்தோலிக்க விசுவாசக் கோட்பாடுகளும், திருத்தந்தையின் தலைமையும் ஆகும். ஆனால், இவற்றிக்கிடையிலும் போட்டியும், குழப்பங்களும் இல்லாமல் இல்லை என்பதுதான் வரலாறு நமக்குச் சொல்லும் படிப்பினையாகும்.

இவ்வாலயம் எழுப்பட்டதாக கருதப்படுகிற காலக்கட்டங்களில் பைசாந்திய கீழைத்திருஅவையில் வழிபாடுகளில் திருஉருவங்களும் (Holy statues) மற்றும் திருஓவியங்களும் (Icons) பயன்படுத்த தடைகள் விதிக்கப்பட்ட நடைமுறையில் இருந்தன. இத்தகைய தடைகள் கி.பி. 726-கி.பி. 787 மற்றும் கி.பி. 814-கி.பி. 842 காலக்கட்டங்களில் ஏற்பட்ட ஐக்கொனோக்கலாஸ்ட் (Iconoclast) என்ற திருஉருவங்கள் மற்றும் திருஓவியங்களுக்கு எதிரான போரில் இத்திருஉருவங்கள் அழிக்கப்பட்டன. அதையும் மீறி பயன்படுத்துபவர்கள் தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டனர். இதனுடைய தாக்கங்கள் கான்ஸ்டாண்டிநோபிளின் ஆட்சி எல்லைக்குட்பட்ட தென்இத்தாலியிலும் இருந்தது.

இலத்தீன் ரீதியில் துறவற மடங்களுக்கான சட்டத்திட்டங்களை வகுத்தவர் புனித ஆசீர்வாதப்பர் (St. Benedict), அதே காலக்கட்டத்தில் கீழைத் திருச்சபையில் துறவறமடங்களுக்கான சட்டத்திட்டங்களை வகுத்தவர் புனித பசிலியார் (St. Basil) ஆவார். இவர்களுடை துறவறமடங்கள் அவர் அவர் பகுதிகளில் பரவியிருந்தது. தென்இத்தாலியில் கி.பி. 1067 ஆளுநராக இருந்த ராபர்ட் ஆல்தோவில்லா என்பவர் இலத்தீன் ரீதி துறவறமடங்களை ஊக்குவிக்க பல்வேறு முயற்சிகளை எடுத்தார். அதன் ஒரு பகுதியாக. இன்று ஆலயம் இருக்கும் பகுதியில் ஒரு சிற்றாலயத்தை ஏற்படுத்தி அதனை ஆசீர்வாதப்பர் சபையிடம் அளித்தார். இந்த துறவறமடமும் அதைச் சார்ந்திருக்கும் இந்த ஆலயம்தான் கீழைத்திருச்சபையின் துறவறமடங்கள் பரவலாக இருந்த தென்இத்தாலியில் ஏற்படுத்தப்பட்ட முதல் ஆசீர்வாதப்பர் சபையைச் சார்ந்த துறவறமடம் என்று கூறப்படுகிறது.





அன்னையின் திருஉருவம் இங்கு எப்படி வந்தது என்பது பற்றி ஒரு பராம்பரிய கதை உள்ளது. இலத்தீன் ரீதியில் வழிபாடுகள் தொடங்கிய காலக்கட்டத்தில் ஒரு அற்புமான நிகழ்வு இத்தீவின் கடற்கரையில் நடைபெற்றது. கி.பி. 1070 ஆம் ஆண்டு மழைக்காலத்தில் புயலும், காற்றும் திரேனியக் கடலை ஆக்கிரமிருந்த நேரம் அது, அக்காற்றை வென்று தன் இலக்கை நோக்கி செல்ல ஒரு கப்பல் போராடிக் கொண்டிருந்தது. தங்களை நம்பிய பயணிகளையும், பொருட்களையும் பத்திரமாய் கரைச் சேர்க்க வேண்டுமென்று கவலையும், அச்சமும் மாலுமிகளின் உள்ளத்தை ஆட்கொண்டிருந்தது. நம்பிக்கையோடு இறைவனை நோக்கி செபித்த நேரத்தில், அவர்களை காப்பாற்ற செய்தி ஒன்று அவர்களுக்கு அருளப்பட்டது. அவர்கள் காப்பாற்றபட வேண்டுமெனில், கப்பலில் உள்ள அன்னையின் திருஉருவம் ஒன்றை அவர்கள் கடலில் மிதக்கவிட வேண்டும் என்பதே அச்செய்தி. அன்னையின் திருஉருவத்தை கடலில் எறிவதா? அதை எங்ஙனம் செய்ய இயலும்? என்கிற பல வினாக்கள் அவர்களின் உள்ளத்தில் தோன்றின. ஆனால், பாதுகாப்பாய் கரை சேர இறைவன் சுட்டிக்காட்டும் வழி இதுதான் என்பதை உணர்ந்து, செபங்களோடு அன்னையின் திருஉருவத்தை கடலில் மிதக்க விட்டனர். அன்னையின் பதம் கடலில் பட்ட தருணத்தில் காற்று அடங்கியது, அழுகின்ற குழந்தை தாயின் அரவணைப்பை உணர்ந்தவுடன் அமைதியாய் உறங்குவது போல கடல் அமைதியாக கப்பலும் தன் இலக்கு நோக்கி பயணித்தது. அன்னையின் திருஉருவம் கடலில் மிதந்து வந்து த்ரோபேயாத் தீவின் கரையில் ஒதுங்கியது. கடற்கரையை வந்தடைந்த அன்னையின் திருஉருவத்தை கண்ட சிலர் ஆச்சரியமடைந்தனர். உடனடியாக, அச்செய்தியானது தீவின் ஆயர் அவர்களுக்கும், தலைவருக்கும் சொல்லப்பட்டது. கரை ஒதுங்கிய அன்னையை தரிசிக்க ஆயர் அவர்கள், தீவின் தலைவர் மற்றும் மக்களோடு பவனியாக வந்தனர். அன்னை தங்கள் தீவிற்கு வந்தது இறையாசீர் என்பதை உள்ளார்ந்த விதமாக நம்பினர். அன்னைக்கு வணக்கம் செலுத்திய பின், அன்னையின் திருஉருவத்தை வணக்கத்திற்காக ஒரு சிறிய குகையில் இருந்த மாடத்தில் வைக்க விரும்பினர். கரையிலிருந்து பவனியாக எடுத்து சென்றனர். ஆனால், குகையை அடைந்த பிறகு





அத்திருஉருவம் மாடத்தை விட பெரியதென உணர்ந்தனர். என்ன செய்யலாம் என்று ஆலோசித்தனர். பின் அன்னையின் பாதத்தை இரம்பத்தால் வெட்டி, உயரம் குறைந்த அன்னையை அம்மாடத்தில் நிறுவுவது என்ற தவறுதலான முடிவை ஆயரும், தலைவரும் எடுத்தனர். அப்பணிக்காக ஆசாரி ஒருவர் வரவழைக்கப்பட்டார். ஆயரின் சொற்படி ஆசாரி அன்னையின் திருஉருவத்தில் இரம்பத்தை வைத்த நொடியில் மின்னல் ஒன்று அங்கிருந்தவர்களை தாக்கியது. அதில் ஆயரும், தீவின் தலைவரும் உயிர் இழந்தனர். ஆசாரி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். இரம்பம் சுக்கு நூறாகியது. பாதங்கள் வெட்டப்பட்டு உயரம் குறைக்கும் முடிவு தவறானது என்பதை மக்கள் புரிந்து கொண்டு மாடத்தின் அளவை மாற்றி, அன்னையின் திருஉருவத்தை அங்கு நிறுவினர். அதன்பின், அங்கு வீற்றிருந்த அன்னை பல்வேறு புதுமைகளை செய்தார். உடல் நலம் குன்றி அதிலும் குறிப்பாக, வயிற்று வலியோடு வந்த ஏராளமானோர் அன்னையின் பரிந்துரையால் பூரண குணமடைந்தனர்.

அன்னையின் திருஉருவம் இங்கு நிறுவப்பட்டபின் ஆசீர்வாதப்ப சபையினர் அன்னைக்கு உகந்த ஒரு ஆலயத்தை கட்டவிரும்பினர். சபையின் தலைமையமாகிய மோந்தேகசினோ துறவறமடத் தலைவரின் ஒப்புதல் பெற்று ஆலய பணிகளைத் தொடங்கினர். மோன்தேகசினோவிலிருந்து அளிக்கப்பட்ட வெண்கல கதவானது இவ்வாலயத்தில் நிறுவப்பட்டு இன்று வரை அப்படியே உள்ளது. தொடக்க காலத்தில் சிறிய ஆலயமாக எழுப்பப்பட்டது. நாளடைவில் பல்வேறு சீரமைப்பு மற்றும் புணரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் கோதிக் முறையில் இந்த ஆலயம் பெரியதாக்கப்பட்டது. இவ்வாலயமானது மூன்று தாழ்வாரங்களோடு கட்டப்பட்டுள்ளது. மையத் தாழ்வாரம் அகலமானதாவும், ஏனைய இரண்டு பக்கவாட்டு தாழ்வாரங்கள் சிறியதாக மக்கள் கடந்து செல்ல ஏதுவாகவும் கட்டப்பட்டுள்ளது. மையப்பகுதியில் இறைமக்கள் அமர்ந்து செபிக்க இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் மையப்பீடத்தில் அன்னையின் திருஉருவமும், அவரோடு புனித சூசையப்பர் மற்றும் மணிமகுடம் சூடி கையில் உலக உருண்டையுடன் நிற்கும் குழந்தை இயேசு என திருக்குடும்பமாக காட்சியளிக்கின்றனர்.

ஆலயத்தின் மையப்பகுதியை தாங்கி நிற்கும் வளைவுகளுடன் கூடிய தூண்களும், தூண்களின் மேல் காணப்படும் எளிய வேலைப்பாடுகளும் இந்த ஆலயத்தின் பழமையை எடுத்துரைப்பதாக உள்ளன. ஆலயத்தின் பல பகுதிகளில் சுவர்கள் பூசப்படாமல், கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்ட கற்கள் வெளியிலி தெரிகின்றன. ஆலயத்தின் மேற்கூரை, சுவர்கள். தூண்கள் அனைத்தும் எளிய வண்ணப்பூச்சுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஆலய மைப்பீடத்தின் பின்புறம் துறவியர் அமர்ந்து செபிப்பதற்கான இடமும், இருக்கைகளின் மேல் புனித ஆசீர்வாதப்பர் துறவற சபையின் இலட்சினையும் பொறிக்கப்பட்டுள்ளன. மையப்பீடத்தின் இடதுபுறம் தன் துறவற ஆடையோடு கையில் செங்கோலோடு புனித ஆசீர்வதப்பரின் சிரூபமும், வலது புறத்தில் புனித ஆசீர்வாதப்பரின் காகம் அமர்ந்திருக்க அதற்கு அவர் உணவு தருவது போன்ற சிரூபமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வலதுபுற மூலையில் ஒரு எளிய மாடத்தில் நவீன கால மரத்தாலான பாடுபட்ட ஆண்டவரைத் தாங்கியிருக்கும் சிலுவை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் இடதுபுற மூலையில் மத்தியகாலத்தை சேர்ந்த மிகப்பழமையான கற்பலகை சிற்பம் ஒன்று உள்ளது. இச்சிற்பம் இக்கோயிலின் பழமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆலயத்தின் முகப்பில், ஆலயமானது புதிப்பிக்கப்பட்டு, கி.பி. 1497ஆம் அர்ச்சிக்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளன. ஆலய சுவர்களில் பதிக்கப்பட்டுள்ள இறந்தோர் நினைவுக் கற்கள் மற்றொரு சான்றாகவும் அமைந்துள்ளன. கி.பி. 1720ஆம் ஆண்டு மோன்தேகசினோவிலிருந்து ஆய்வுகாக வந்த துறவி, தன்னுடைய குறிப்புகளில் அன்னையின் தேவாலயத்தின் சிறப்புகளையும், அங்கு வந்த திருப்பயணிகள் குறித்து பதிவு செய்துள்ளார். கி.பி. 1905ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஆலயம் பெரும் சேதங்களை சந்தித்தது. பின், ஆலயமானது புணரமைக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் இருந்து அருள்பாலிக்கும் இந்த அன்னைக்கு, அன்னையின் விண்ணேற்பு பெருவிழாவாகிய ஆகஸ்டு 15ஆம் நாள் விழா எடுக்கிறார்கள். இவ்விழா நிலத்தில் அல்ல மாறாக கடலில் கொண்டாடப்படுகிறது. விழா நாளன்று அன்னையின் திருஉருவமானது அலங்கரிக்கப்பட்ட படகில் ஏற்றப்பட்டு, 20க்கும் மேற்பட்ட படகுகள் சூழ, அருகில் இருக்கும் தீவுகளுக்கு சென்று அருள்பாலித்து மீண்டும் ஆலயம் வந்து சேர்கிறார். ஆன்னை ஆலயம் வந்தவுடன் நிகழும் வாணவேடிக்கைகள், விண்ணில் விண்மீன்கள் அனைத்து மண்ணகத்துக்கு வந்துவிட்டனவோ என்ற எண்ணும் வகையில் அத்தீவு பகுதி முழுவதையும் ஒளி வெள்ளத்தால் நிரப்பி காண்போரின் உள்ளத்தை கொள்ளை கொள்கின்றன.

இறைவனில் நம்பிக்கைக் கொண்டு வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் இறைவன் வாக்களித்த விண்ணகத்தை ஒருநாள் அடைவோம் என்கிற அசைக்க முடியாத எதிர்நோக்கோடும், நம்பிக்கையோடும் வாழ்கிறோம் என்பது உண்மையே. நம்பிக்கையாளர்களின் முதல்வரான அன்னையின் விண்ணேற்பு பெருவிழாவை கொண்டாடி மகிழும் இந்நாட்களில், இந்த அன்னையின் ஆலயத்தை பற்றி அறிவது நமக்கு மகிழ்ச்சியே. விண்ணேற்பு அன்னை நமக்காக பரிந்து பேசுவாராக் நாமும் ஒரு நாள் விண்ணக மகிமையில் பங்குபெறுவோம் என்கிற விசுவாசத்தில், நம்பிக்கையில் தொடர்ந்து வாழ்வோம்

பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியா - 21

தா.சுரேஷ், பூம்பொழில்நகர்

மாமரியின் பாசமிகு பக்தர்களே மாமரி நம் தேவைகளில் நம்மீது தயவிரக்கம் காட்டி நமக்கு உதவ மாமரி எப்போதும் விழிப்பாயிருக்கிறார்கள் என்பதை குறித்து சென்ற இதழில் சிந்தித்தோம். இந்த இதழில் மாமரி தன் பக்தர்களை எல்லா தீமைகளில் இருந்தும் காப்பாற்றுகிறார்கள் என்பதைக் குறித்து சிந்திப்போம்.

நம் இரட்சண்யமாகிய மாமரி:

மாமரி தாயை மகிமைப்படுத்துவதிலும், அவர்களுக்கு தன்னை அர்ப்பணிப்பதிலும் உண்மையாய் இருக்கும் மாமரியின் பக்தன் ஒருவனை தீமை மேற்கொள்வது என்பது இயலாத காரியம். மாமரியின் பக்தன் ஒரு தனிப்பட்ட முறையில் தன்னை அவர்களின் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டு, அந்த ஒப்புக்கொடுத்தலின் படி வாழ முயற்சி செய்வான் என்றால், அன்னையின் தனிப்பட்ட வழி நடத்துதலையும் பாதுகாப்பையும் அவனால் உணர்ந்துகொள்ள முடியும். "மாமரியிடம் தன்னை அர்ப்பணித்து, அதன் மூலம் அவர்களால் நேசிக்கப்படும் ஒருவன் இழக்கப்படுவதும் இயலாத காரியமாகவே இருக்கிறது" என்று புனித ஆன்செல்ம் கூறுகிறார்.

ஒரு நாட்டை ஆட்சி செய்யும் அரசரின் தாயை ஒருவன் சிறப்பான வார்த்தைகளால் தொடர்ந்து வாழ்த்துவான் என்றால், அவனுடைய வேண்டுதலை அத்தாய் புறந்தள்ளி விடுவார்கள் என்று நம்மால் நினைக்க இயலாது. அவ்வாறிருக்க பரலோக அரசராம் நம் சேசுவின் அன்பிற்கினிய தாயை, தினந்தோறும் அருள் நிறைந்த மரியே வாழ்க என்று வாழ்த்திவிட்டு பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று செபிக்கும் போது அன்னை அவ்வாறு செபிக்கின்றவர்களை கண்டும் காணாமல் இருப்பார்கள் என்று நாம் நினைக்க இயலுமோ? நிச்சயமாக இயலாது. எனவே அன்னையை வாழ்த்துவதிலும், மகிமைப்படுத்துவதிலும் நாம் உண்மையாக இருப்போம். நம்முடைய இரட்சண்யத்தை அன்னை கவனித்துக் கொள்வார்கள்.

அவநம்பிக்கையில் உள்ளவர்களின் ஒரே நம்பிக்கை அன்னை மாமரி:

நம்மை இரட்சிப்பதற்கான வல்லமையும் சித்தமும் மாமரியிடம் குறைவுபட முடியாது என்பது புனித பெர்னார்ட் கருத்தாகும். சுர்வேசுரனுடைய மாதாவின் செபம் வீணாக வாய்ப்பில்லை என்பது புனித அந்தோனினுஸ் கருத்தாகும்.

புனித எராஸ்முஸ் ஆசீர்வதிக்கப்பட்ட அன்னை மாமரியை பின்வருமாறு வாழ்த்துகிறார். "ஓ நரகத்தின் பயங்கரமே ஓ கிறிஸ்தவர்களின் நம்பிக்கையே, வாழ்க: உங்களில் கொள்ளும் நம்பிக்கை இரட்சணியத்தின் வாக்குத்தத்தமாக இருக்கிறது." புனிதரின் இந்த வாழ்த்து அவநம்பிக்கையில் உள்ளவர்களின் நம்பிக்கையாக உள்ளது.

அன்னையின் வாக்குறுதி:

திருத்தந்தை இருபத்திரண்டாம் அருளப்பருக்கு நம் அன்னை மாமரி தந்த வாக்குறுதி புகழ் பெற்றதாகும். அன்னை மாமரி திருத்தந்தைக்கு தோன்றி, கார்மல் உத்தரியத்தை அணிந்திருக்கும் அனைவரையும், அவர்கள் மரணமடைந்தபின் வரும் சனிக்கிழமையில் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து தான் விடுவிப்பதாக அனைவருக்கும் தெரியப்படுத்தும்படி அவருக்கு உத்தரவிட்டார்கள். திருத்தந்தை இதை ஓர் ஆணைமடலால் பிரகடனம் செய்தார். அவருக்கு பின்வந்த திருத்தந்தையர்களால் இது உறுதிபடுத்தப்பட்டது. எனவே அன்னையின் அன்பை பெறுவதற்கு செபமாலையும் உத்தரியமும் மிகவும் அவசியமாகும். தகுந்த முறையில் செபமாலை செபித்து உத்தரியம் அணிந்து கொண்டு அன்னையை அன்பு செய்ய முயற்சி செய்வோம்.

நிறைவாக....

செப்டம்பர் 8 ஆம் நாள் அன்னையின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிவரும் நாம், அன்னையின் பிறந்த நாளை மாமரி அன்னைக்கு மகிழ்ச்சி தரும் விதமாக எவ்வாறு கொண்டாடலாம் என்று சிந்திப்போம். மாமரித் தாய் பரலோக பூலோக அரசியாக முடிசூட்டப்பட்டு இயேசுவோடு இணைந்து இயேசுவின் விருப்பப்படி அரசாட்சி செய்துவரும் இன்றைய காலத்தில் பலவீனர்களாகிய நாம் எதைத்தான் பிறந்த நாள் பரிசாக அன்னைக்கு கொடுத்துவிட முடியும்? முடியாது தான். ஆனாலும் இயேசுவை பகைக்கின்ற ஒருவரின் மனமாற்றத்திற்காக ஒருசில செபங்களையும் ஒறுத்தல் முயற்சிகளையும் உண்மையான அன்போடு செய்து அன்னைக்கு ஒப்புக்கொடுத்தால், அன்னை அதனை மாறாத கனிவோடு ஏற்றுக்கொள்வார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையே அவசரகதியில் சொல்லப்பட்ட ஒரு அருள்நிறை மந்திரத்தைக் கொண்டு கடவுளின் பகைவராக மரிக்க இருந்த ஒருவரை காப்பாற்றிய செய்தி மெட்ஜீகோரி அன்னையின் வரலாற்றில் காண்கிறோம். எனவே அன்னையின் பிறந்த நாளுக்கு அன்புப் பரிசாக எத்தனை அருள்நிறை மந்திரங்கள் பக்தியுடன் செபித்து ஒப்புக் கொடுக்க முடியுமோ அத்தனையும் அன்னையின் விருப்பப்படி பயன்படுத்திக்கொள்ள ஒப்புக் கொடுப்போம். அன்னையின் அரவணைப்பையும் ஆசீரையும் பெற்றுக்கொள்வோம்

புனித குழந்தை மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருட்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச
புனித அந்தோனியார் ஆலயம் விளாங்காட்டூர்



பொதுக்காலம் 24 ஆம் ஞாயிறு
13 - 09 - 2026

திருப்பலி முன்னுரை

இவ்வாண்டின் பொதுக்காலத்தின் இருபத்து நான்காம் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தை நம் கடவுள் மனிதர்களாகிய நாம் செய்கின்ற தவறுகளையும், பாவங்களையும் கணக்கில் வைத்திருப்பதில்லை என்பதை எடுத்துக் கூறி நாமும் நமக்கு எதிராக மற்றவர்கள் செய்கின்ற தவறுகளையும், பாவங்களையும் கணக்கில் வைக்காமல் தாராளமாக மன்னிக்க வேண்டும் என்ற அழைப்பைத் தருகிறது. நம்முடைய தந்தையாகிய இறைவன் இரக்கம் மிகுந்தவராக இருக்கின்றார். தம்முடைய இரக்கத்தினால் மனிதர்களாகிய நாம் எத்தனை முறை பாவம் செய்தாலும் அத்தனை முறையும் மன்னித்து நம்மை தம் அன்பு மக்களாக ஏற்றுக்கொள்கின்றார். நம்முடைய கடவுளைப் போல நாமும் ஒருவர் மற்றவர் செய்கின்ற தவறை இரக்கத்தோடு மன்னிக்க வேண்டும். மன்னித்து வாழ்கின்றபோது நாம் யாரை மன்னிக்கின்றோமோ அவர்களுக்கு புதிய வாழ்வு கிடைக்கின்றது, நமக்கும் இறை ஆசீர் கிடைக்கின்றது. பல நேரங்களில் நாம் நம்முடைய உறவினர்கள், உடன்பிறந்தவர்கள் செய்கின்ற பாவங்களை மன்னிக்க மறுக்கிறோம். நாம் மற்றவர்களை மன்னிக்க தடையாக இருப்பது நம்மிடம் இருக்கின்ற ஆணவம் மற்றும் கோபம் ஆகும். இந்த இரண்டு தீய குணங்களையும் நாம் அகற்றி தாழ்ச்சி மற்றும் அன்பு என்ற இரண்டு புண்ணியங்களையும் நம் வாழ்வில் கொண்டிருக்கின்றபோது நாம் மன்னிக்கின்ற மக்களாக மாறுகின்றோம். எனவே, இன்றைய இறைவார்த்தை நமக்கு கொடுக்கின்ற அழைப்பை ஏற்று நாம் மற்றவர்களை மன்னிப்பதற்கு தடையாக இருக்கின்ற ஆணவத்தையும், கோபத்தையும் நீக்கி, தாழ்ச்சியும், அன்பும் நிறைந்தவர்களாக ஒருவர் மற்றவரை மன்னித்து வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

முதல் வாசக முன்னுரை

நமக்கு அடுத்திருப்பவர்கள் நமக்கு எதிராக தவறு செய்யும்போது நாம் அவர்கள் மீது சினம் கொண்டு பழிக்குப்பழி வாங்காமல் அவர்களை மன்னிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் வழியாக நாம் பகைமையை அகற்றி ஒருவர் மற்றவரோடு நட்புறவு கொண்டு வாழ முடியும் என்பதை எடுத்துச் சொல்லும் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

வாழ்வோர் மீதும் இறந்தோர் மீதும் அதிகாரம் கொண்டுள்ள நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்காக வாழ்கின்றார். நாமும் அவருக்காக வாழ வேண்டும், அவருக்கு உரியவர்களாக வாழ வேண்டும் என்று எடுத்துச் சொல்லும் தூய பவுலடியாரின் வார்த்தைக்கு செவிகொடுப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

அருட்பணியாளர்: மன்னிப்பதில் வள்ளலும், வல்லவருமான நம் இறைவனிடத்தில் நாமும் அவரைப் போல தாராள உள்ளத்தோடு மற்றவர்களுடைய பாவங்களை மன்னித்து வாழ வரம் வேண்டியவர்களாய் நம்முடைய அனைத்து தேவைகளுக்காகவும் மன்றாடுவோம்.

1. அன்பு இறைவா, நீர் உருவாக்கிய திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் உம்முடைய திருவுளத்தின்படி இறைமக்களை நம்பிக்கையிலும், இறைஞானத்திலும் வழிநடத்தத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. மன்னிப்பதில் வள்ளலான இறைவா, நாங்கள் எங்களோடு வாழ்கின்ற சகோதர, சகோதரிகள் எங்களுக்கு எதிராக செய்கின்ற தவறுகளை இரக்கத்தோடும், அன்போடும் மன்னித்து ஏற்றுக்கொண்டு வாழ வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, பிரிந்து வாழுகின்ற தம்பதியருக்காகவும், உடைந்துபோன குடும்பங்களுக்காகவும் மன்றாடுகின்றோம். அவர்கள் ஒருவர் மற்றவரை மன்னித்து, நல்ல முறையில் புரிந்துகொண்டு மீண்டும் இணைந்து மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை வாழ வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. எல்லாம்வல்ல இறைவா, நாங்கள் உமக்கு எதிராக செய்கின்ற பாவங்களை நீர் உம்முடைய அளவில்லாத இரக்கத்தினால் மன்னிக்கின்றீர் என்பதை உணர்ந்து ஒப்புறவு என்னும் அருளடையாளத்தின் வழியாக எங்களுடைய பாவங்களை உம்மிடம் ஒப்புக்கொடுத்து மன்னிப்புப் பெற்று உம்முடைய அன்பு மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. அமைதியின் இருப்பிடமான இறைவா, பல்வேறு நாடுகளுக்கிடையே நடைபெறும் போர்கள், கலவரங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டு பகைமை ஒழிந்து நாடுகள் அனைத்தும் தங்களுக்குள் நட்பு பாராட்டி வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அருட்பணியாளர்: எங்களைப் படைத்து பராமரித்து வரும் எங்கள் அன்பு ஆண்டவரே, நாங்கள் உம்மிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள அருள்வரங்களை நினைத்து உம்மை போற்றுகின்றோம். நாங்கள் யார்மீதும் பொறாமை கொள்ளாமல் எங்களிடம் இருக்கின்ற செல்வத்தைக் கொண்டு மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் வாழத் தேவையான அருள் வரங்களை எங்களுக்குத் தரவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 25 ஆம் ஞாயிறு

20 - 09 - 2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, ஆண்டின் பொதுக்காலத்தின் 25ம் ஞாயிறைக் கொண்டாட நாம் அனைவரும் ஒரே குடும்பமாக கூடி வந்திருக்கின்றோம். இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தையானது கடவுளுடைய அளவில்லா அன்பையும், தாராள உள்ளத்தையும் நமக்கு எடுத்துக்கூறி, மனிதர்களாகிய நாம் யார்மீதும் பொறாமை கொள்ளாமல், ஒருவர் மற்றவர் மீது எரிச்சல்படாமல் வாழ அழைப்புக் கொடுக்கின்றது. நம்முடைய கடவுள் நம்மீது அளவுக்கதிகமான அன்பு கொண்டிருக்கிறார். அந்த அன்பினால் தாராளமாக எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களைப் பொழிகின்றார். கடவுளுடைய அருளையும், ஆசீரையும் பெற்றுக்கொண்ட நாம் நம்மிடத்தில் இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சியோடு வாழ வேண்டும். நம்மிடம் இல்லாத செல்வத்தைக் குறித்து கவலைப்படாமலும் மற்றவர்களிடம் இருக்கின்ற செல்வத்தைக் குறித்து பொறாமைப்படாமலும் வாழ்வதுதான் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை என்பதை உணர்ந்தவர்களாக நாம் அனைவரும் வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

முதல் வாசக முன்னுரை

கடவுளுடைய எண்ணங்களும், வழிமுறைகளும் மனித எண்ணங்களைவிட, வழிமுறைகளைவிட உயர்ந்தது, மிகவும் சிறந்தது. மனிதர்கள் பழிவாங்கும் எண்ணத்தோடும் பகைமை உணர்வோடும் வாழ்கின்றார்கள். ஆனால் கடவுள் மன்னிப்பதில் தாராள உள்ளத்தினராகவும், இரக்கம் காட்டுபவராகவும் இருக்கிறார் என்று எடுத்துச்

சொல்லி அந்த கடவுளை நாம் தேடிக் கண்டடைந்து அவரைப் பின்பற்றி வாழ அழைப்புவிடுக்கும் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

நம்முடைய வாழ்வு கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். கிறிஸ்து போதித்த நற்செய்திக்கு ஏற்றவாறு நாம் வாழ்ந்து நமது சொல்லாலும் செயலாலும் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தும் தூய பவுலடியாரின் வார்த்தைக்குக் கவனமுடன் செவிமடுப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

அருட்பணியாளர்: அன்பார்ந்தவர்களே, தாராள மனதோடு நம்மை மன்னித்து தம்முடைய அன்புப் பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளும் இரக்கம் மிகுந்த நம் கடவுளிடம் நாமும் மன்னிப்பதிலும், இரக்கம் காட்டுவதிலும் தாராள உள்ளத்தோடு வாழ அருள் வேண்டி நம் மன்றாட்டுக்களை எடுத்துவைப்போம்.

1. அன்பின் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், துறவறத்தார் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களை இரக்கத்தோடும், பரிவோடும், அன்போடும் எந்தவித பாகுபாடு இல்லாமலும் வழிநடத்தத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. ஆற்றலின் ஊற்றே எம் இறைவா, தோல்விகளாலும், இழப்புக்களாலும் சோர்வடைந்து இறைநம்பிக்கையில் தளர்ச்சியடைந்துள்ள அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் மீண்டும் புத்துணர்ச்சியுடனும், மனவலிமையுடனும், இறைநம்பிக்கையுடனும் புதிய வாழ்வு வாழத் தேவையான அருளைத்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. இரக்கத்தின் ஆண்டவரே எம் இறைவா, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் அனைவரும் எங்கள் அழைப்பிற்கேற்ப எங்களுக்கு எதிராக குற்றம் செய்யும் அனைவர்மீதும் இரக்கம் காட்டி மன்னித்து வாழ உமது ஆற்றலைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை ம்னறாடுகின்றோம்.

4. எல்லாம் வல்ல இறைவா, எங்கள் குடும்பங்களில் வாழுகின்ற அனைத்து நோயாளிகளுக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். அவர்கள் அனைவரையும் இரக்கத்தோடு நீர் தொட்டு குணப்படுத்தி நல்ல உடல் உள்ள ஆரோக்கியத்தைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. அருள் வழங்கும் வள்ளலே எம் இறைவா, நாங்கள் அனைவரும் எங்களிடம் இல்லாத செல்வங்களைக் குறித்து வருத்தப்படாமல் நீர் எங்களுக்கு வழங்கியுள்ள அருள்வரங்களில் மகிழ்ச்சி கொண்டு வாழ வரம் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அருட்பணியாளர்: அன்பே உருவான எம் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் பக்தியோடும், நம்பிக்கையோடும் உம்மிடம் எடுத்துவைத்து மன்றாடியுள்ள அனைத்து வேண்டுதல்களுக்கும் கனிவாய் செவிசாய்த்து அவற்றை நிறைவேற்றி நாங்களும் இரக்கத்தோடும், பரிவோடும், அன்போடும் வாழத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டின் பொதுக்காலம் 26 ஆம் ஞாயிறு

27 - 09 - 2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, ஆண்டின் பொதுக்காலத்தின் 26ம் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தையானது நம்முடைய சொல்லும் செயலும் ஒத்துப்போக வேண்டும் என்ற செய்தியைத் தருகிறது. நாம் எதைச்சொல்லுகின்றோமோ அதைச் செய்ய வேண்டும். எதைச் செய்கின்றோமோ அதைச் சொல்ல வேண்டும். நம்முடைய வார்த்தை "ஆம்" என்றால் "ஆம்" என்றும் "இல்லை" என்றால் "இல்லை" என்றும் இருக்க வேண்டும். பொய் பேசி போலியான வாழ்க்கை வாழக்கூடாது. ஒரு மனிதனிடம் இருக்கும் செல்வம், பணம், பட்டம் ஆகியவற்றைக் கொண்டு அம்மனிதன் நேர்மையாளன் என்று உலகம் அறிந்து கொள்வதில்லை. மாறாக, ஒரு மனிதனிடம் இருக்கும் உண்மைத்தன்மையை வைத்தே அம்மனிதன் நேர்மையாளன் என அறியப்படுகின்றான். இதை திருவள்ளுவரும்,

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோருக்கு
பொய்யா விளக்கே விளக்கு

என்று கூறுகின்றார். இன்றைய மூன்று வாசகங்களும் பொய்பேசி நேர்மையற்ற வாழ்க்கை வாழும் அனைவரும் தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு தங்களுடைய நேர்மையற்ற, போலியான பாதையிலிருந்து திரும்பவேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றன. இறைவார்த்தை தருகின்ற அழைப்பை ஏற்றுக்கொண்டு நாமும் பொய் பேசி போலியான வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களை ஏமாற்றுவதை நிறுத்திவிட்டு உண்மை பேசி நேர்மையான வாழ்க்கை வாழ வரம் வேண்டியவர்களாக பக்தியுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

முதல் வாசக முன்னுரை

பொல்லாரும், நேர்மையற்றோரும் தங்களது போலியான வழியிலிருந்துவிலகிஉண்மையைக்கண்டுணர்ந்து,தாங்கள்செய்துவருகின்ற தீமையை விலக்கி நீதியையும், நேர்மையையும் கடைபிடித்தார்கள் என்றால் அவர்கள் தங்கள் நீதியின்படி வாழ்வார்கள். நீதியைக் கடைபிடிக்காமல் தீயவழியில் வாழ்பவர்கள் தங்கள் தீமையிலேயே அழிந்துபோவார்கள் என்று எடுத்துரைக்கும் இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவர்கள் அனைவரும் இயேசு கொண்டிருந்த மனநிலையைப் பெற்றிருக்க வேண்டும். மனிதர்களின் மீட்புக்காக கிறிஸ்து தன்னுடைய தெய்வீக நிலையைப் பற்றிக்கொண்டிருக்காமல் தம்மையே தாழ்த்தி சிலுவையில் தன்னையே கையளித்தார். அந்த தியாகச் செம்மலான இயேசுவைப் பின்பற்றுகின்ற நாமும் மற்றவர்களின் நலனுக்காக பல்வேறு தியாகங்கள் செய்து நம்மையே கையளித்து வாழ அழைப்புவிடுக்கும் தூய பவுலடியாரின் வார்த்தையை கவனமுடன் ஏற்று வாழ்வாக்குவோம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

அருட்பணியாளர்: அன்புமிக்க சகோதர, சகோதரிகளே, நானே வழியும், உண்மையும், வாழ்வும் என்று முழங்கிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் நம்முடைய மன்றாட்டுக்கள் அனைத்தையும் நம்பிக்கையோடு எடுத்துவைப்போம்.

1. அன்பின் இறைவா, அகில உலக திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் உம்மீது நம்பிக்கைகொண்ட இறைமக்களை உண்மையின் வழியில் நடத்தத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. எல்லாம் வல்ல இறைவா, எங்கள் நாட்டையும், உலகையும் ஆளுகின்ற தலைவர்கள் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் அனைவரும் நேர்மையோடும், நீதியோடும் ஆட்சிசெலுத்தவும், தன்னலமின்றி, பொதுநலத்தோடு பணிசெய்து வாழவும் அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. எங்கள் ஆண்டவராகிய இறைவா, நாங்கள் அனைவரும் எங்கள் மீட்பராகிய கிறிஸ்து கொண்டிருந்த மனநிலையோடு வாழவும், அவரைப்போல எல்லாரையும் அன்பு செய்யவும், மற்றவர்களின் நலனுக்காக உழைத்து, தியாகம் நிறைந்த உள்ளத்தோடு வாழவும் வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, எங்கள் குடும்பங்களிலும், பங்கிலும் உள்ள அனைத்து குழந்தைகளையும், இளையோரையும் ஆசீர்வதியும். அவர்கள் அனைவரும் கிறிஸ்துவைப் போல தாழ்ச்சி நிறைந்த மனநிலையோடு தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. உண்மையின் ஊற்றே எம் இறைவா, உம்முடைய மக்களாகிய நாங்கள் அனைவரும் தீமையை விலக்கி, நேர்மையோடு வாழவும், யாருக்கும் எதிராக பொய்சாட்சி சொல்லாமலும் உண்மையை மட்டுமே பேசி வாழ்ந்து உம்முடைய சாட்சிகளாக எந்நாளும் திகழ வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

ஆண்டின் பொதுக்காலம் 27 ஆம் ஞாயிறு

04 - 10 - 2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, ஆண்டின் பொதுக்காலத்தின் 27ம் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தை நம் அனைவரையும் கடவுளுடைய அன்புக்கு தகுதியுள்ளவர்களாகவும், பிரமாணிக்கமுள்ளவர்களாகவும் வாழ நமக்கு அழைப்புவிடுக்கின்றது. நம்முடைய கடவுள் நம் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நாளும் தம்முடைய நன்மையினாலும், அருளினாலும், ஆசீரினாலும் நிரப்பிக்கொண்டிருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் பல்வேறு துன்பங்கள், வேதனைகள், ஆபத்துக்கள் வருகின்றபொழுது கடவுள் நம்மை பாதுகாத்து பராமரிக்கின்றார். கடவுளின் இந்த அன்புமிக்க பராமரிப்பையும், அவருடைய அருள்வரங்களையும் பெறுகின்ற நாம் அவருக்கு பிரமாணிக்கம் உள்ளவர்களாக வாழ்கின்றோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடவுளிடமிருந்து பல நன்மைகளையும், அற்புதங்களையும் பெற்றுக்கொண்ட இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்கு உண்மையுள்ளவர்களாக இல்லாமல் அவருக்கு எதிராக கிளர்ச்சி செய்தார்கள். கடவுளுடைய கட்டளைகளுக்கு புறம்பாக வாழ்ந்தார்கள். அவர்களைப்போல நாமும் பல நேரங்களில் கடவுள் நமக்கு செய்துள்ள அனைத்து நன்மைகளையும் மறந்தவர்களாக கடவுளுடைய அன்புக்கு பிரமாணிக்கம் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த நேரங்களுக்காக மனம் வருந்தி இனிமேலாவது கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்வோம். கடவுளால் படைக்கப்பட்டு அவரிடமிருந்து வாழ்வைப் பெற்றுக்கொள்கின்ற நாம் கடவுளுக்கு உரியவர்களாகவும், பிரமாணிக்கமுள்ளவர்களாகவும் வாழ முயற்சிசெய்வோம். அதற்கான அருள்வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

முதல் வாசக முன்னுரை

இஸ்ரயேல் மக்களை ஆர்வத்தோடும், விருப்பத்தோடும் தன்னுடைய மக்களாகத் தேர்ந்தெடுத்த இறைவன் அவர்கள் தனக்கு எப்பொழுதும் பிரமாணிக்கமாயிருந்து நன்மை செய்கின்ற மக்களாகத் திகழ்வார்கள் என நம்பினார். ஆனால், அம்மக்கள் நன்மை செய்யத் தவறினார்கள், கடவுளுடைய அன்புக்கு விரோதமாக வாழ்ந்து கடவுளை மனம் நோகச் செய்தார்கள். நாமும் கடவுள் காட்டிய வழியிலிருந்து தவறுகின்றபோது, கடவுள் நம் வாழ்வில் செய்கின்ற நன்மைகளை மறக்கின்றபோது இஸ்ரயேல் மக்களைப் போல கடவுளை மனம் நோகச் செய்கின்றோம் என்பதைச் சுட்டிக்காட்டும் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

உண்மையான, கண்ணியமான, தூய்மையான செயல்களைச் செய்து நற்பண்புடைய மக்களாய் கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாக நாம் திகழுகின்றபோது கடவுள் தருகின்ற நிலையான அமைதி நிறைந்த வாழ்வை நாம் பெற்றுக்கொள்வோம் என்று எடுத்துச் சொல்லும் தூய பவுலடியாரின் வார்த்தைக்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

அருட்பணியாளர்: அன்பார்ந்தவர்களே, நம் வாழ்வில் ஒவ்வொரு நாளும் பல அருள்வரங்களைப் பொழிந்து நம்மை பல்வேறு நன்மைகளால் நிரப்பும் அன்புமிக்க இறைவனிடம் நம் வாழ்விற்குத் தேவையான அருள்வரங்களை வேண்டி மன்றாடுவோம்.

1. எல்லாம் வல்ல இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற கடமைகளை நேர்மையோடும், கண்ணியத்தோடும், தூய்மையோடும் நிறைவேற்றி கிறிஸ்துவின் மனநிலையைக் கொண்டு வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, உம்முடைய மக்களாகிய நாங்கள் அனைவரும் உம்மிடமிருந்து பெற்றுக் கொள்கின்ற அனைத்து நன்மைகளுக்கும் எந்நாளும் நன்றியுள்ளவர்களாக வாழ்ந்து நீர் தருகின்ற நிலையான அமைதியைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியோடு வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. மருத்துவருக்கெல்லாம் மருத்துவராகிய எம் இறைவா, பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிற அனைத்து நோயாளிகளையும் உம்முடைய அருள்

கரத்தினால் தொட்டு குணமாக்கியருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. *எங்கள் ஆண்டவராகிய இறைவா, ஏழைகள், வறியோர், ஒடுக்கப்பட்டோர், தனிமையில் வாடுவோர் ஆகிய அனைவரையும் உம்முடைய கரத்தில் ஒப்படைக்கின்றோம். அவர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து அவர்களுக்குத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்து பாதுகாத்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.*

5. *அன்பே உருவான எம் இறைவா, படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் அனைவருக்காகவும் வேண்டுகின்றோம். அவர்களுடைய படிப்பிற்கும் தகுதிக்கும் ஏற்ற விதத்தில் நல்லதொரு வேலைவாய்ப்பினை வழங்கி, அவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையை வளமையோடு வாழத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.*

அருட்பணியாளர்: என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும் நீர் எங்கள் மீது காட்டுகின்ற அன்பிற்காகவும், பரிவிற்காகவும் உம்மைப் போற்றிப் புகழுகின்றோம். நாங்கள் அனைவரும் உம்மிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற அருள்வரங்களுக்கு எந்நாளும் நன்றியுள்ளவர்களாகவும், உமக்கு பிரமாணிக்கம் உள்ளவர்களாகவும் எங்களை வாழச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



"4½ ஆண்டுகளுக்குப் பிறகு - எந்த சிகிச்சையும் இல்லாமல் ஜீவமாதாவின் அருளால் கிடைத்த குழந்தை".

பெயர்: குறிப்பிடப்படவில்லை

ஊர் : பங்கு: குறிப்பிடப்படவில்லை

திருமணமாகி 4½ ஆண்டுகளுக்குப் பிறகு எங்களுக்கு குழந்தை கிடைத்தது. மருத்துவர்கள் அனைவரும் எங்களுக்கு குழந்தை குழந்தை பாக்கியம் இல்லை என்றும் , தொடர் சிகிச்சை எடுத்துக் கொண்டால் முயற்சி செய்யலாம் என்றும் கூறினார்கள். ஆனால் எந்தவித சிகிச்சையும் இல்லாமல் ஜீவமாதாவின் அருளால் குழந்தை பாக்கியம் எங்களுக்கு கிடைத்தது , அதற்காக ஜீவமாதாவுக்கு நாங்கள் மிகுந்த நன்றி செலுத்துகின்றோம் மரியே வாழ்க. இயேசுவுக்கே புகழ்.

சம்மனசுக்களின் ராக்கினியே



அருட்பணி. **லூர்துசாமி.** ம.ஊ.ச.
நவதுறவு இல்லம், மாமல்லபுரம்.

நாம் வாழும் இந்த சமூகத்தில் நிறைய மனிதர்கள் சம்மனசுக்களைப்போல மிகவும் தூய்மையாக மின்னல் அடிக்கும் வெண்மையில் ஆடைகள் அணிந்துகொள்கின்றார்கள். வெளி அலங்காரம் செய்துகொள்கின்றார்கள. ஆனால் அவர்களின் உள்ளமே பழுதடைந்து காணப்படுகின்றது. இதற்குக் காரணம் மனிதர்கள் தவறக்கூடியவர்கள். பாவ இயல்புடையவர்கள் என்பதேயாகும். மாறாத விவிலியத்தில காணக்கிடக்கும் விவரங்களைப் பார்த்தால் சம்மனசுக்கள் தங்கள் வெளியடையாளங்களில் மட்டுமல்லால் உள்ளத்திலும் சொல்லிலும் செயலிலும் காலைநேரப் பணித்துளிபோல தூய்மை நிறைந்தவர்களாக இருக்கின்றார்கள். அதனால்தான் அவர்கள் கடவுளுக்கு சற்றே சிறியவர்களாகவும் மாட்சியையும் மேன்மையையும் முடியாகச் சூடியவர்களாகவும் உள்ளனர் *(தி.பா 8:5)*. இதனால் சம்மனசுக்கள் மனிதர்களைவிட உயர்ந்தவர்கள ˙கடவுளை விட சற்றே தாழ்ந்தவர்கள் என்பதை அறிகின்றோம்.

மரியா ஒரு மனிதப் பிறவி சம்மனசுக்களை விட தாழ்ந்தவர். ஆனால் கபிரியேல் வானதூதர் கன்னி மரிக்கும் காட்சி தந்து மரியா ஆமென் என்று கூறி கடவுளின் திட்டத்துக்கு தன்னையே கையளித்தது கடவுளுக்கு தனது கருவறையில் இடம் கொடுத்ததனால் மரியா சம்மனசுக்களை விட தாழ்ந்தவர் அல்ல சம்மனசுக்களும் அல்ல மாறாக எல்லாப் படைப்பு பொருளுக்கும் மேலானவராக இருகக்கின்றார். எனவேதான் கபிரியேல் வானதூதர் மரியாவுக்குத் தோன்றி அருள்மிகப் பெற்றவரே வாழ்க *(லூக்.1:25)* என வாயார வாழ்த்தினார். எனவேதான் அன்னையாம் தாய்த் திருஅவை அன்னை மரியாவை "சம்மனசுக்களின் இராக்கினியே" என்று கூறிக் கொண்டாடுகின்றது. திருஅவையின் தந்தையர்கள் அன்னை மரியாவை அரசி மற்றும் இராக்கினி என்றும் அழைக்கின்றார்கள். இதற்கும் பக்கபலமாக திருஅவை தந்தையர்கள் காட்டும் விவிலியப் பகுதி திருவெளிபாடு *12:1* தி.பா.*45* .

திருஅவையின் மரபுப்படியும் திருவிவிலியத்தின் மரபுப்படியும் மரியா தொடக்கமுதலே வானதூதர்களால் வழிநடத்தப்பட்டு இருக்கின்றாள். கிறிஸ்து பாலைநிலத்திலும் கெத்சமணித் தோட்டத்திலும் வானதூதர்களால் பணிவிடை செய்யப்பட்டதுபோல அன்னை மரியாவும் வானதூதர்களால் பணிவிடை செய்யப்பட்டார் என்று புனித பீட்டர் கிறிஸ்தோசம் கூறுகின்றார். புனித அல்போன்ஸ் மரிய லிகோரி அன்னையைப் பற்றிக் கூறும்போது வாணதூ ததர்களுக்கும் மரியன்னைக்குமுரிய உறவு எப்பொழுது முழுமைபெற்றது

என்றால் மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுதுதான். ஆண்டவரே நீர் உமது வல்லமை விளங்கும் பேழையுடன் உமது உறைவிடத்திற்கு எழுந்தருள்வீராக (திபா.132:1-3) என்ற பாடலை வானதூததர்கள் பாடி மரியாவை வரவேற்றார்கள் என்றும் கூறுகின்றார். அத்தோடு மட்டுமில்லாமால் இஸ்ரயேல் மக்கள் தங்கள் வெற்றி விழாவின்போது யூதித்தை புகழ்ந்ததுபோல வாதூததர்கள் மரியாவை போற்றிப் புகழ்ந்தார்கள். நீயே எருசலேமின் மேன்மை நீரே இஸ்ராயேலின் பெரும் மாட்சி நம் இனத்தாரின் உயர் பெருமை நீரே எல்லாம் வல்ல இறைவன் எக்காலத்துக்கும் உமக்கு ஆசி வழங்குவாலாக. (யூதித் 16: 9-10).

அன்னை மரியா சம்மனசுக்களின் இராக்கினி (அரசி) ஏனென்றால் எல்லா சம்மனசுக்களும் பரிசுத்த மரியே என்றும் இறைவனின் தாயே என்றும் எப்பொழுதும் வாழ்த்துகின்றனர் என்று புனித போனவெந்தூர் கூறுகின்றார். மற்ற வானதூததர்களையும் விட புனித மிக்கேல் வானதூததர் தான் எப்பொழுதும் மரியாவை எங்களின் அரசியே என்று புகழ்ந்துகொண்டே இருக்கின்றார் என்று புனித அகுஸ்தினார் கூறுகின்றார். அன்னை மரியா சம்மனசுக்களின் இராக்கினி இது அன்னை மரியாவின் தாழ்ச்சிக்குக் கிடைத்தட்ட பரிசு என்று புனித மான்போர்ட் புகழ்கின்றர். அன்னை மரியா இறைவனின் வானதூததர்கள் படைக்கு தலைவியாக இருப்பதால் இப்படை அடித்து நொறுக்கும் ஒன்றாக இருக்கின்றது. இதன் அன்னை மரியா நம்மையெல்லாம் தன் காவல்படை வழியாக காத்து வருகின்றாள்.

அனைத்து வானதூதர்களுக்கும் தங்கள் அரசியான மரியாவை அருள் நிறைந்தவரே வாழ்க என வாழ்த்துகின்றபோது மெழுகுதிரி எரியும்பொழுது தன் உருவை இழப்பதுபோல சாத்தானின் உருவம் அழிந்துபோகும் என்கின்றார் புனித போனவெந்தூர் மீண்டும் அன்னையைப் புகழ்கின்றார். ஆர்த்தடாக்ஸ் என்று சொலலப்படுகின்ற கிழக்கத்திய திருஅவையும் அர்மீனியன் மற்றும் எத்தியோப்பியன் திருப்பலிப் புத்தகமும் அன்னை மரியாவை சம்மனசுக்களின் இராக்கினியே என்று கூறி பெருமைப்படுத்துகின்றது. இப்படிப்பட்ட நம் அரசியாம் அன்னையிடமும் நம்முடைய திருஅவையை உலக நாடுகளை நம் இந்தியத் தாய் நாட்டை நமது பங்கு சமுதாயம் மற்றும் குடும்பங்களை மட்டுமன்றி நம்மையே நாம் ஒப்பக்கொடுப்போம். அழிந்துபோகக்கூடிய இந்த உலகத் தலைவர்கள் அரசர்கள் முன் மண்டியிடுவதைவிட என்றும் அரசியான அன்னை மரியாவிடம் மண்டியிட்டு மன்றாடுவோம். அவர்தம் மகன் இயேசுவிடம் தம் வானதூதர் படையுடன் வந்து என்றுமே நம்மை பாதுகாப்பார். நாம் போகும்போதும் வரும்போதும் நம் கால் இடறி விழாமல் பாதுகாத்துக்கொள்வார். வானதூதரின் அரசியே உமது புண்ணியங்களான செபமும் இரக்கமும் தியோனை வெற்றிகொள்ள உதவும் ஆயுதங்கள் என்பதை உணர்ந்து அவற்றை எங்கள் வாழ்வில் அணிகளன்களாக மாற்ற அருள்தாரும் தாயே என்று தொடர்ந்து செபிப்போம்.

சம்மனசுக்களின் இராக்கினியே - எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

எசாயா: 34 முதல் 50 வரை



1							6	5	4
							9		
		14					13		
			17			16			
	10								
				15					
		11					12		
	7							8	
2									3

வலமிருந்து இடம்

3. *எனக்கு இது நோவாவின் நாள்களில் நடந்ததுபோல் உள்ளது யாரின் காலத்துப் பெருவெள்ளம் இனி மண்ணுலகின்மேல் பாய்ந்து வராது என்று நான் ஆணையிட்டேன்?*

6. *பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை "" செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்.*

8. *_____நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது, என்கிறார் எனக்கு இரக்கம் காட்டும் ஆண்டவர்.*

9. *மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் வழி முறைகளைவிட என் வழிமுறைகளும், உங்கள் எண்ணங்களைவிட என் எவைகளும் மிக உயர்ந்திருக்கின்றன?*

இடமிருந்து வலம்

1. *ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது ஏனெனில், அவர் எனக்கு என்ன செய்துள்ளார்? ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார்.*

2. *உங்கள் தந்தை ஆபிரகாமையும் உங்களைப் பெற்றெடுத்த சாராவையும்*

நினைத்துப் பாருங்கள் தனியனாய் இருந்த அவனை அழைத்தேன் அவனுக்கு ஆசி வழங்கிப் பெரும் _____.

7. நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப்படுத்தவும் நலம்தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையைப் பறைசாற்றவும், சீயோனை நோக்கி, "உன் கடவுள் அரசாளுகின்றார்" என்று கூறவும் வருவோனின் _____ மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன

11. அவர்கள் வழிமரபினர் பிறஇனத்தாரிடையேயும், அவர்கள் வழித்தோன்றல்கள் மக்களினங்கள் நடுவிலும் புகழ் அடைவார்கள் அவர்களைக் காண்பவர் யாவரும் அவர்களை ஆண்டவரின் _____ வழிமரபினர் என ஏற்றுக்கொள்வார்கள்.

14. பேறுகாலத்தை ஏற்படுத்திய நான் மகப்பேற்றைத் தடை செய்வேனா? என்கிறார் ஆண்டவர். மகப்பேற்றுக்கு காரணமான நான் எதை அடைத்துவிடுவேனா? என்கிறார் உங்கள் கடவுள்.

15. உம் திருத்தலத்தை உம் புனித மக்கள் சிறிது_____ உடமையாகக் கொண்டிருந்தனர் எங்கள் பகைவர் அதைத் தரைமட்டமாக்கினர்.

17. _____என்னும் தீமையை முன்னிட்டு நான் இஸ்ரயேல் மீது சினமடைந்து, அவனை அடித்து நொறுக்கினேன் சீற்றம் கொண்டு என்னை அவனுக்கு மறைத்துக்கொண்டேன் அவனோ என்னைவிட்டு விலகி மனம்போன போக்கிலே சென்றான். 57:17

மேலிருந்து கீழ்

1. அவர் நேர்மையை மார்புக் கவசமாய் அணிந்துகொண்டார் விடுதலையைத் தலைச்சீராவாய்த் தம் தலையில் வைத்துக்கொண்டார் அநீதிக்குப் பழிவாங்குதலை ஆடையாய் உடுத்திக்கொண்டார். எதனை மேலாடையாகப் போர்த்திக்கொண்டார்?

4. ஆண்டவரின் கையில் நீ அழகிய_____திகழ்வாய் உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்.

5. எதன் மேண்மை உன்னை வந்து சேரும்? என் திருத்தூயகத்தைச் சுற்றியுள்ள இடத்தை அழகுப்படுத்தத் தேவதாரு, புன்னை, ஊசியிலை மரம் ஆகியவை கொண்டு வரப்படும்ஞ என் பாதங்களைத் தாங்கும் தலத்தை மேன்மைப்படுத்துவேன்.

10. "கைவிடப்பட்டவள்" என்று இனி நீ பெயர்பெற மாடடாய் "பாழ்பட்டது" என இனி உன் நாடு அழைக்கப்படாது நீ யார் என்று அழைக்கப்படுவாய்? உன் நாடு "பெயுலா" என்று பெயர் பெறும். ஏனெனில், ஆண்டவர் உன்னை விரும்புகின்றார் உன் நாடு மணவாழ்வு பெறும்.

13. நெடுங்காலமாய் இடிந்து கிடந்தவற்றை அவர்கள் கட்டியெழுப்புவார்கள் முற்காலமுதல் பாழாய்க் கிடந்தவற்றை நிலைநிறுத்துவார்கள்_____ தலைமுறையாக இடிந்து அழிந்து கிடந்த நகர்களைச் சீராக்குவார்கள்.

14. அவர்கள் உங்கள் உறவின் முறையார் அனைவரையும் அனைத்து மக்களினத்தாரிடையே இருந்து ஆணடவருக்கு அளிக்கும் படையலாகக் கொண்டு சேர்ப்பார்கள் இஸ்ரயேல் மக்கள் தூய_____ ஒன்றில் உணவுப் படையலை ஆண்டவரின் கோவிலுக்கு எடுத்து வருவது போல், அவர்களைக் குதிரைகள், தேர்கள்,

பல்லக்குகள், கழுதைகள், ஒட்டகங்கள் ஆகியவற்றின் மேல் ஏற்றி, எருசலேமிலுள்ள என் திருமலைக்கு அழைத்து வருவார்கள், என்கிறார் ஆண்டவர்.

16. இதை நீங்கள் காண்பீர்கள், உங்கள்_____மகிழ்ச்சி கொள்ளும், உங்கள் எலும்புகள் பசும்புல்போல் வளரும் ஆண்டவர் தம் ஆற்றலைத் தம் ஊழியருக்குக் காட்டுவார் என்பதும் அவரது சினம் அவர்தம் பகைவருக்கு எதிராய் மூளும் என்பதும் அறியப்படும்.

17. மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன்மீது நான் கொண்ட எது நிலை சாயாது? என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது, என்கிறார் உனக்கு இரக்கம் காட்டும் ஆண்டவர்.

கீழிருந்து மேல்

2. நீ துணை வேண்டிக் குரல் எழுப்பும்போது, நீ திரட்டிய சிலைகள் உன்னை விடுவிக்கட்டும் காற்று அவை அனைத்தையும் அடித்துக் கொண்டுபோம் வெறும் மூச்சே அவற்றை ஊதித தள்ளிவிடும் என்னிடம் அடைக்கலம் புகுவோர் நாட்டை உரிமையாக்கிக் கொள்வர் என்_____ உடைமையாய்ப் பெறுவர்.

3. கொடுமைத்தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும்

8. அவர்கள் வேண்டுவதற்கு முன்னே நான்_____தருவேன் அவர்கள் பேசிமுடிப்பதற்கு முன்னே பதிலளிப்பேன்.

10. பேரொலி எழுப்பிக் கூப்பிடு, நிறுத்திவிடாதே_____முழங்குவது போல் உன் குரலை உயர்த்து என் மக்களுக்கு அவர்களின் வன்செயல்களையும், யாக்கோபின் குடும்பத்தாருக்கு அவர்களின் பாவத்தையும் எடுத்துக்கூறு.

11. மேலைநாட்டினர் ஆண்டவரின் பெயருக்கு அஞ்சுவர் கீழைநாட்டினர் அவரது மாட்சிக்கு நடுங்குவர் ஆண்டவரின் பெருங்காற்று அடித்துவர, ஓடிவரும் எதுவென அவர் வருவார்?

12. சீயோனின் வெற்றி எதன் ஒளியெனவும், அதன் மீட்பு சுடர் விளக்கெனவும் வெளிப்படும்வரை, அதனை முன்னிட்டு மவுனமாயிரேன் எருசலேம் பொருட்டுச் செயலற்று அமைதியாயிரேன்.

தயாரிப்பு : த.எட்மன், OSSM, திருச்சி-21 (அலைபேசி எண்: 94436 72226)
விடைகள் அனுப்ப இறுதிநாள் 25-07-2026
முகவரி :
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி,
பதிப்பாசிரியர் "அப்படியே ஆகட்டும்",
ஜோதிமாதா ஆலயம்,
ராஜீவ்காந்தி சாலை,
ஓக்கியம்பேட்டை,
சென்னை - 600097.

விவிலிய வினாடி வினா

சரியான விடைகளை எழுதியவர்கள்

அருட்சகோதரிகள்

மேரிமெளரிஸ்- மாதாகோட்டை, மேரி செசாரியா- மாதவரம், சென்னை, லில்லி புஸ்பம்- மாதாகோட்டை, அசுந்தா-தூத்துக்குடி, லோராமேரி-தூத்துக்குடி, லீமா-களியக்காவிளை, செர்வைட் கான்வென்ட் தோகமலை, சிரோன்-இடிந்தகரை, புஸ்பம் சிந்தாமணி, ஜூலி எலிசபெத்-மாதாகோட்டை, ரொமானா-தூத்துக்குடி, சோஸ்பிட்டாமேரி-திருச்சி, ஜெயமணி-மதுரை, ஜோசிஜெயராணி-திருச்சி, பிரேமா-திண்டுக்கல், ஜெரி மேரி- தூத்துக்குடி, ரூபல்லாமேரி- தூத்துக்குடி, ரஞ்சிதம்- மதுரை, புஸ்பாமேரி-மதுரை, பிரேமா - சங்கர்நகர், ஏஞ்சல்-கன்னியாகுமரி, ஜெயசேகரி-தாம்பரம், வில்சன் மேரி-திருச்சி, ஜான்சிமேரி- மதுரை, ரூபி- தோகமலை, புஷ்பாமேரி- சிவகங்கை, சகாயம்-ராம்நாட், ஜான்சிமேரி- மதுரை, ஜெரின்மேரி- திண்டுக்கல், ரூபி-தூத்துக்குடி.

பொதுநிலையினர்

இருதய விஜீலா-திண்டுக்கல், அற்புத சீலி-திண்டுக்கல், செலின் மேரி-திருச்சி-21, மேரி மார்க்ரட்- திருச்சி 21, ஆனிபீட்டர்ராஜ்- திருச்சி 21, மாசில்லா-தூத்துக்குடி, புஷ்பகண்ணு-கோயம்புத்தூர், சோசப் தக்கர்-திருச்சி 21, ஆன்டனி செரின் -சென்னை, அனிரூத் ஜெய்டன்-திருச்சி, ஹெர்மன்-தூத்துக்குடி, பாத்திமா-திருச்சி-21, பிரான்ஸிஸ்பேசில்-திருச்சி, லீமாதெரஸ்-திருச்சி, அமல செல்வி-திண்டுக்கல், லீலாவதி-திண்டுக்கல், சிப்ரியன்-தெளி, மிக்கேல்சாமி-கோவை, ஜோஸ்பின்மேரி-திண்டுக்கல், டைமி-சென்னை, இம்மாகுலேட் சோபியா- திருச்சி, அமல செல்வி- திண்டுக்கல், கிளாரா லூர்துமேரி - திருச்சி.

குழுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

திருமதி. இம்மாகுலேட் சோபியா- திருச்சி

அருட்சகோதரி. புஷ்பாமேரி- சிவகங்கை.

Owned and Published by **THE ORDER OF SERVANTS OF MARY** from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097. and Printed by **M. RAJA REGAN** at **Devan Press**, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: **Fr. SAMYDURAI OSM.**

நம்புங்கள் நலம் பெறுவீர்
மன்றாடுங்கள் மழலை வரம் பெறுவீர்

குழந்தை வரம் அருளும் ஜீவ மாதாவே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

குழந்தை இயேசு ஆலயம்

பரமேஸ்வரன் நகர், சோழிங்கநல்லூர், சென்னை 600119

JEEVA MADHA
PRAY FOR US

INFANT JESUS CHURCH

Parameswaran Nagar, Sholinganallur, Chennai 600119

Parish Priest - Rev.Fr.Antony Samy,OSM | **Parishioner**

Website: www.infantjesussholinganallur.org Ph: +919600393380

Jeevamadha Annual Feast
1st Saturday of December

Parish Annual Feast 2nd
Sunday of February

ஜீவமாதா திருவிழா
டிசம்பர் முதல் சனிக்கிழமை

பங்குத்திருவிழா பிப்ரவரி
இரண்டாம் ஞாயிறு

திருப்பலி நேரம்

திங்கள் - சனி மாலை 6.30 மணி (தமிழ்)

ஞாயிற்றுக்கிழமை

காலை 7.00 மணி & 8.30 மணி (தமிழ்)
காலை 10.30 மணி & மாலை 5.00 மணி (ஆங்கிலம்)

மாதத்தின் முதல் சனி ஜீவமாதா நவநாள் ஆராதனை, திருப்பலி காலை 10.30 மணிக்கு நடைபெறும்

Mass Timings

Mon - Sat 6.30 PM (Tamil)

Sunday

7.00 AM & 8.30 AM (Tamil)
10.30 AM & 5.00 PM (English)

First Saturday of Every Month Jeevamadha Novena, Adoration and Mass at 10.30AM

